# தென்மொழி



## இற்றைத் தமிழனின் இழிநிலை

இற்றைத் தமிழனின் இழிநிலை, எனக்கு
மற்றைத் துயரினும் மாணப் பெரியது!

மொழியினில் இவனொரு தாய்தவிர் மூங்கை!
முன்னோர் மொய்ம்பினை அறிகிலா மூடம்!
இனத்தை எதிர்ப்பதில் நாயினும் இழிந்தோன்!
எவர்க்கும் அடிமைசெய் இழிநிலைத் தரகன்!
நாட்டுப் பற்றினில் காட்டுக் குரங்கிவன்!
நாணமும் மானமும் நழுவிய தசைத்திரள்!
அரசியல் அரங்கிலோர் அடியிலா ஏனம்!
அயலார்க் குழைப்பதில் மயல்படாக் கழுதை!

குட்டக் குட்டக் குனிவுறும் கூனன்!
கோபுரப் பெருமையைக் குப்பையில் சாய்த்தோன்!
பொருள்செய் முயற்சியில் இருள்தோய் பூச்சி!
போக்கிலா துழலுமோர் நோக்கிலா ஏதிலி!
சமயச் சேற்றினில் அமையப் புதைந்தவன்!
சாதிச் சாய்க்கடை நெளிந்திடும் புழு, இவன்!
ஏற்றமும் மாற்றமும் நினையா இழி மகன்!
எதிரிக் குழைத்திடும் இனியநல் ஏவலன்!

தன்மதிப் பிழந்த தக்கைக் கொழுந்து!
தாழ்ச்சிக் குட்டையின் மீட்சியில் தவளை!
கொடுத்த கை முறிக்கும் நன்றிக் கொலைவன்!
குலத்தைப் பிளந்திடும் கோடரிக் காம்பு!

—(தொடர்ச்சி உள்ளே)

சுவடி: 14.
ஓலை: 2
விலை: உரு 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

# நமக்கு வந்த மடல்கள்.

**0:519 :** அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு; வணக்கம். நலம். நலமே விளைந்திடுக. அண்மை இதழ் அருமையான இதழாக மலர்ந்திருப்பது கண்டு பெருமகிழ்வுற்றேன். மேலட்டையில் காணப்பட்ட பாடல், தன்மானமற்ற தமிழனை அப்படியே ஓவியமாக்கிக் காட்டியிருக்கிறது. ஐம்பதாண்டுகளுக்கு மேலாக நான் இதழாசிரியன் என்ற முறையில் பல துறையிலுள்ள தமிழர்கள் நிலை கண்டு, தாங்களும் வளராமல் பிறரையும் வளரவிடாமல், தன்மானம் சிறிதுமின்றிப் பகைவர்களுக்குப் பணியாட்களாய், கோடரிக் காம்புகளாய் இருந்து வரும் அவலத்தைக்கண்டு வெதும்பிவந்த என் விசும்பலை உங்களின் உயர் பாவில் கண்டு வியந்தேன். என்னைப்போலவே உங்கள் உள்ளம் எவ்வளவு நைந்து துயரமுற்றிருக்கிறது என்று உணர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்தேன். நாடாளுமன்றத் தேர்தல் முடிவு குறித்து நீங்கள் எழுதியுள்ள ஆசிரியவுரையும் என்னைக்கவர்ந்தது. சிறையில் வாடியிருந்தபோது உளம் நொந்து பாடிய அறப்பாடல் முன்னைய ஆட்சியைத் தீய்த்ததில் வியப்பில்லை. உண்மைப் பாவாணரின் பாடல் பயனற்றதாகாதே! அன்புள்ள,

— நாரண-துரைக்கண்ணன், சென்னை-94.

**0:520:** தமிழ் ஊறிவரும் தண்ணூற்றே! அந்தணரே! நீவிர் எல்லா நலமும் வளமும் பெற்று, நோக்கிலும் போக்கிலும் வெற்றிபெற வாலறிவன் அருள்பொழிவானாகுக, என வேண்டி, எழுத்தில் கண்டு மகிழும் நான், தங்களை எழுத்தால் வணங்கி வாழ்த்தி வரையும் முதல் மடல். வணக்கம்.

அறம் பாடிய அருமை அண்ணனே! ஆசிரிய உரையான 'அரசியல் சூறுவளிகள்', நடுவு நிலைமைக் கண்கொண்டு காண்பார்க்கு சிறந்த ஒன்றாய் அமைகின்றது என்பதில் ஐயமில்லை. குறிப்பாக தி. மு. க. கட்சியில் உள்ள உடன் பிறப்பாளர்கள் உணர்ந்து உடனே தவறுகளையும் தம்பட்டத் தன்மைகளையும் நீக்கிக்கொண்டு ஒழுக்கம் தொண்டுள்ளம் கொண்டு மக்களுக்குப் பணி செய்ய முன்வருவார்கள் என எண்ணுகின்றேன். ஆரியச் செயல்களையும், ஆரியர்களின் கொள்கைகளையும், நரிக்குணத்தையும், சாடும், வெறுக்கும் திராவிடர் கழக ஏடான "விடுதலை" ஆரியச் சொற்களையும், ஆரிய எழுத்துகளையும் ஏற்று வெளிப்படுத்திக்கொண்டு, "தமிழ் நாடு தமிழருக்கே" என்று கூறுவதற்கு நாணுமல் இருக்கின்றதே என்பதை எண்ணும்பொழுது பெரியாரின் சிறந்த கொள்கைகளில் படிந்த எம்போன்றோர் நாணவேண்டியுள்ளது. மேலும் பாரதிதாசனைப் பாராட்டும் விடுதலையார் அருகில் உள்ள நடமாடும் பாவலரை–பாரதிதாசனை– உங்களை அறியாமலும், பின்பற்றாமலும் இருக்கின்றனரே! என்னே தமிழனின் நெல்லிக்காய் மாண்பு! காலைச் செங்கதிரே! தென்மொழியில் குடந்தை பா. சுந்தரேசனார் அவர்களின் இசைபற்றிய துணுக்கச்செய்திகளையும், பாவிய நாடகங்களையும் வெளியிட வேண்டுகின்றேன். புலவர் இறைக்குருவனார் அவர்களின் "மறைமலையடிகள் பிள்ளைத்தமிழில்" அம்மை அம்பலவாணர் வழுத்தும், தமிழ்த்தாய் வழுத்தும் நனிசிறப்புடையன. "தனிம வரிசை"-சிறப்பு. ஐயா இல. க. இர. அவர்களுக்கு நன்றி!

—வாலறிவன், மலையப்பநல்லூர். சிவபுரம் தஞ்சை.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.)

(அட்டைப் பாடல் தொடர்ச்சி)

கள்ளமும் கயமையும் காய்த்திடும் முள் மரம்!
காட்டிக் கொடுத்திடும் கழிகடைப் பிறவி!
தலைமையின் முதுகில் தைக்குறுங் கைவாள்!
தன்னலம் கணக்கிடும் தந்திரக் குறு நரி!

ஆய இப் 'பெருமைகள்' அனைத்தும் குறைவற
ஏய விளங்கிடும் 'தமிழனை' எண்ணியே,
மூளையும் உருகி முழுநலங் கருகி
வேளையும் பொழுதும் நாளும் வெம்பிச்
சுழலும் என்னுயிர் சுருக்கெனக்
கழலும் நாளைக் கணக்கிட் டிருப்பனே!

---

# அரசியல் வானில் பெரியதும் சிறியதும்!

பெரியது கேட்பின், குறியிலாத் தொண்டனே!
பெரிது பெரிது பதவியே பெரிது!
அதனினும் பெரியது அரசியல் தலைமை!
அரசியல் தலைமையின் அதிகாரம் பெரிது!
அதிகா ரத்தினும் அடுக்கடுக் காகப்
புதிது புதிதான பட்டமும் பெரிது!
பட்டமோ சுவரொட்டிப் பெருமையில் பாதி!
சுவரொட்டிப் பெருமையோ,
ஊர்வலம் வந்தே உலகவளம் போகும்
சீர்வளம் என்னும் சிறப்பினில் பாதி!
சீர்வளச் சிறப்போ, சீர்வளச் சிறப்போ,
பேர்வளப் புலவோர் பேசவும் பெரிதே!

சிறியது கேட்பின் அறிவார்ந்த தொண்டனே!
சிறிது சிறிது தொண்டு சிறிது!
அதனினும் சிறியது அடங்கிய கொள்கை!
அடங்கிய கொள்கையின் ஆர்வம் சிறிது!
ஆர்வப் போக்கினும் அன்றன் றைக்கும்
வாய்மை பேணி வரல் மிகச் சிறிது!
வாய்மை பேணுதல் வாயா நிலையினும்
மக்களை நம்புதல் மாணச் சிறியது!
மக்களை நம்பும் மடமையைப் பார்க்கினும்
தலைவனை நம்பும் தரமிகச் சிறிது!
தலைவனை நம்பித் தரங்கெடு வதினும்,
வெடுக்கென விலகி வேறொரு கட்சியைத்
தொடங்கா திருப்பது துன்னவும் சிறிதே!

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



சுவடி : 14 ஓலை : 2

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

# தென்மொழி

மேழம்-தி. பி. ௨00௮-மே-1977.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

ஆசிரியர் : பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.

## ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே!



தமிழினம் மிகவும் நொந்துபோன ஓர் இனம். மிகச் சீரும் சிறப்புமாக வாழ்ந்த இப் பேரினம், கடந்த மூவாயிர மாண்டுகளாகத் தொடர்ந்த மொழித் தாக்குதலும், இனத் தாக்குதலும் உற்றுத், தேனினும் இனியதும், இயற்கையறிவு நிரம்பியதுமான தன் தாய்மொழியையும், அனைத்தினும் சிறந்த பண்பாடு நிறைந்த தன் இனத்தையும் சீரழித்துக்கொண்டு, குற்றுயிரும் குலையுயிருமாகச் சாநடை போட்டு இன்று வாழ்ந்து கொண்டுள்ளது. இன்று வாழ் தமிழன் தன் பெயருந் திருவும் உருவும் சிதைந்து, தன் தாய் மொழியையே நன்கு பேசவும் எழுதவும் அறியாத மூங்கையாய், பிற மொழிக்கும் இனத்திற்குமே ஏவல் போகும் முழு அடிமையாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இவன் வாழ்கின்றான் என்று சொல்வதைவிடக் கொஞ்சங் கொஞ்சமாகச் சீரழிந்து செத்துக் கொண்டிருக்கின்றான் என்பதே மிகப் பொருத்தமாகும்.

இந்நிலையில், இவ்வினத்தைப்பற்றி முழுக்கவலை கொண்டு, இதன் இயற்கையாம் சிறப்பு நிலைகளைக் கட்டிக் காத்துக் கொள்ளவேண்டும்

என்னும் ஏக்கத்தினுல், இதனைப் புறத் திருத்தமும், அகத் திருத்தமும் செய்யும் உலையாப் பெரும்பணியுள், தம்மை முற்றும் மூழ்க்கிக் கொண்ட-கொள்கின்ற தலைவரும், தொண்டரும் இக்கால் மிகச்சிலர். அவர்கள் தம் அறிவு நிலையானும், வினை நிலையானும்; முற்றும் மதி மயக்கமும் மனக்கலக்கமும் செயல் திரிபும் கொண்ட இற்றைத் தமிழனுக்குத் தம் மொழி, இனத்துப் பழம் பெருமைகளையெல்லாம் எடுத்தெடுத்து விளக்கி, இவன் சீரழிந்த வரலாற்றையும், சிறப்பிழந்த நிலைகளையும் நினைவூட்டி, இவனை அற்றை நின்று இற்றை வரை உள்ளும் புறமுமாய்ப்பிடித்து அலைக்கழித்துக்கொண்டிருக்கும் ஆரியம் என்னும் அச்சழியாத வீரியப்பேயை இனமும் இடமும் காட்டி, ஓரளவேனும் உய்ந்துவர மாட்டானா என்னும் ஒழியாக் கழிவிரக்கத்துடனும், அழியாக் கொள்கை உரனுடனும், தம் தம் வாழ்வையும் மூச்சையும் முற்றுவித்துக்கொண்ட—கொள்கின்ற முயற்சிகள் பலவாகும்.

அம் முயற்சிகளிலெல்லாம் கொடுமுடியாக விளங்கிக் கொண்டிருக்கும் இற்றை நூற்றாண்டின் இறுதி முயற்சிகளும், இக்கால் உள்ளுடைந்து விரிசலுற்றுப் பே ய்விடுமோ என்றெண்ணிக் கலங்கிக் கண்ணீர் வடிக்குமாறு, இவ்வினத்தைக் கட்டிக் காக்கின்றோம் என்று சூளுற்று முன்வந்த அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும், தம் தம் சொல்லம்புகளையும் வில்லம்புகளையும் தமக்குள் தாமே எய்து போரிட்டுக் கொண்டு அழிந்துபோகின்ற காட்சிகள் இன்று நடந்து கொண்டிருக்கின்றன. இப் பூசல்களையும் ஏசல்களையும் நம் கண்களும் காதுகளும், கரிக்கவும் கடுக்கவும், பார்க்கவும் கேட்கவும நேர்ந்துள்ள ஒரு நிலை, இவர்கள் கட்டிக் காக்கப்புகுந்த தமிழினத்தின் இழிந்து, இடிந்துபோன நிலையிலும் மிகமிக இழிவும் இரக்கமும் உடையதாகும். இனி இவையிரண்டினும் நாணத்தக்கதாகும், நம் எதிரிகளும் படித்து எண்ணி மகிழும்படியும். மேலும் அவர்கள் வழியில் எச்சரிக்கையாக இருக்கும்படியும், நாம் அவர்களுக்குத் துணையாக இதனை இங்கு வெளிப்படையாக எடுத்துக் கூறப்போகும் தவிர்க்க வியலாத இவ்விழி நிலை.

பொதுவாகவே வேறு எந்த இனத்தைக் காட்டிலும் தமிழினத்தில் உட்பூசல்களும் உள்ளுடைவுகளும் மிகுதி. இதனை இந்நிலத்து வாழும் வாய்ப்பினின்று தப்பி, அயல்நிலத்துச்சென்று வாழும் தமிழரிடையேயும் காணலாம். இதற்கு அடிப்படைக் கரணியம், வேறு எவ்வினத்தை விடவும் இவ்வினத்திற்கே இயல்பாக அமைந்துள்ள மானவுணர்வு-தான். மானம்என்பது அறிவின் படிநிலைப்பட்டு வளரும் ஒரு நல்லுணர்வாகும், ஆனல், அவ்வறிவினும் கூரியதாகும். மெய்ப்பொருளியலின்படி, அறிவுணர்வு என்பது பிரிவுணர்வாகும்; அன்புணர்வு என்பது செறிவுணர்வாகும். எந்த ஓர் இருவரிடை அறிவுணர்வுமட்டும் மிகுந்து விளங்குகின்றதோ, அவரிடைப்பிரிவுணர்வும் அந்த அளவில் மிக்கு விளங்கும். எனவேதாம், அறிவுணர்வு மிகமிக அன்புணர்வும் மிகுந்து தோன்றி, அவ் வறிவுணர்வால் ஏற்படவிருக்கும் பிரிவைக் கட்டிக்காத்துக்கொள்ள வேண்டும் என்பது மெய்ப்பொருளியலாரின் உயிரியற் கொள்கையாகும். இதனைப் பண்டைத் தமிழ் முனிவோர் தாம் கண்டு விளக்கிய தெய்வியற் கூறுகளினும் விளங்கக் காட்டினர். திருக்குறளிலும் 'மானம்' என்னும் அதிகாரத்துள் வரும்

பத்துக் குறட்பாக்களிலும் மானவுணர்வு பிரிவுப் பொருளுணர்ச்சியான் புலப்படுத்தப் பெறுவதைக் காணலாம். இனி, இவ்வதிகாரம் குடியியலில் காட்டப்பட்டதன் இன்றியமையாமை, ஒரு குடி தன் பெருமையை மானவுணர்வினாலேயே கட்டிக்காத்துக் கொள்ள வேண்டும் என்பதனால் என்க. அவ்வாறு அவ்வதிகாரப்பொருளுணர்வு தோன்றும்படி, அதற்குமுன் 'குடிமை' அதிகாரத்தையும், அதன்பின் 'பெருமை' அதிகாரத்தையும் வைத்து, அவ்விரண்டின் நடுவாக மானத்தை வைத்துக் காட்டினார் என்க.

இனி; மானம் பிரிவுணர்வென்றறிந்தும் இதனைக் குடிமைக்கு உரிமைப்படுத்தி உரைப்பானேன் எனின், குடிப்பெருமை கட்டிக் காக்கப் பெறவேண்டும் என்பதில் பொது மானம் கருதப்படவேண்டுமே யன்றி தனி மானம் அஃதாவது, தன்மானம் கருதப்படுதல் கூடாதென்னும் குறிப்புப்பட, இதனைக் குடிமைக்கும் பெருமைக்கும் நடுவாக வைத்துக் கூறினார் என்க. இனி, இதனோடு அமையாது குடிநலம் காக்கப் புகுந்தான் ஒருவன், தன் தனிமானம் கருதுதல் கூடாதென்பதைக் 'குடி செயல் வகை' என்று சிறப்புற வகுத்துக் காட்டிய அவ்வியலின் தனியதிகாரத்தான் வலியுறுத்துவர், அம் மெய்ப்பொருளாசிரியர். இவற்றையெல்லாம் ஈண்டு விரித்துரைக்கின் ஆன்று அகலுமாகலின், நம் திருக்குறள் மெய்ப்பொருள் உரையின் — கண் மிகச் சுவைபட விளக்கிக் காட்டுவோம்; ஆண்டுக் காண்க.

இனி, இக்கால், நம் தமிழக முன்னேற்றத்தையும் அதனினும் பன்மடங்கு நம் தமிழர் முன்னேற்றத்தையும், இனி, அதனினும் பல மடங்கு நம் தாய்மொழியாம் தமிழ் முன்னேற்றத்தையுமே கருதியுழைக்கும் எண்ணத்தக்க ஓரிரண்டு கட்சிகளுள் தலையாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினின்று, உள்ளுடைந்து வெளியேறிய தலைவர்கள் ஒரு சிலரைப்பற்றிச் சிறிது இங்குக் கூறுவோம்:

நந்தமிழினத்தைக் கட்டிக் காக்கும் பெரும்பணியில். தம்மை முற்றும் அழித்துக்கொண்ட இவ்வினத் தலைவர்களாகிய பெரியாரும், அண்ணாவும் கண்டு காட்டிய கொள்கை வழியில், அவர்களைப் பின்பற்றி நடப்பதாக மக்கட்கு வெளிப்படுத்திக் காட்டிய தலைவர்கள் அவர்கள். அவர்கள் இதுகாறும் ஒத்தியங்கி வழிநடத்திய தி. மு. கழகம் கருக்குலைந்து கட்டு விடுமானால் என்னென்ன விளைவுகள் எதிர்ப்படும் என்று எவரும் சொல்ல முடியாது. அதன் இப்பொழுதைய தலைவராகிய கலைஞரும், அரசியலில் ஓரளவு ஆளுமைத் திறம் வாய்க்கப்பெற்றவருமாகிய திரு. அருட்செல்வர் என்னும் கருணாநிதியின், தனிப்பட்ட ஒரு சில தவறுகள் கட்சியின் தவறுகளோ, கொள்கையின் தவறுகளோ அல்ல என்பது சிறிதே எண்ணிப் பார்ப்பார்க்கும் நன்கு புலப்படுவதாகும். மேலும், அவை போன்ற தவறுகள் கடந்த காலங்களில் செய்யப்படவில்லை என்று அவர்களே சொல்லிவிட முடியாது. இன்னும், அத்தவறுகளுக்கும் தங்களுக்கும் எவ்வகைத் தொடர்புமே இல்லை என்பதாகவும் தங்களை விலக்கிக்கொள்ள முடியாது. இனி, அத்தவறுகளைப் போன்றவை வேறு எந்த அரசியல் கட்சிகளிலும் நிகழவே இல்லையென்று முடிவு கட்டிவிடவும் முடியாது. இனி, தாங்கள் விலகி வேறொரு கட்சியை

அமைத்துக்கொண்டால் மட்டும், அவை போன்ற தவறுகள் கலைஞர் நின்றியக்கும் தாய்க்கட்சியில் இனி நடக்கவே நடக்காது என்றோ, தாங்கள் தொடங்கிய புதுக்கட்சியில் அத்தகைய தவறுகளுக்கு வாய்ப்பே இருக்காது என்றோ உறுதி கூறவும் அவர்களால் இயலாது. இத்தனை வலிவற்ற கரணியங்களின் அடிப்படையிலும் இனி எந்தத் தவறுகள் எவரால் எந்தக் கட்சிக்கு நிகழக்கூடாது என்று இவர்கள் கூறுகிறார்களோ, அந்தத் தவறுகள் மேலும் மேலும் அவராலேயே எவ்வகைத் தடுப்பாற்றலும் இன்றி எடுப்பாகச் செய்வதற்கு இயைபாக திறப்பு வழியை அமைத்துக் கொடுத்தது போலும் – அவரை அங்கேயே விட்டுவிட்டுத் தாங்கள் மட்டும், அக்கட்சியை விட்டுவிலகி வெளிவந்து விடுவது அரசியலறிவும் ஆகாது; இனமானம் காத்ததும் ஆகாது என்பதைத் திட்டவட்டமாக அவர்கள் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

இனி, தமிழர்கள் அனைவரும் ஒரே மொழி. இன, அரசியல் எதிர்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் ஆட்பட்டவர்களே! அவர்களின் போக்குகள் கால, இட, அறிவு, வாய்ப்பு மாறுபாடுகளால் எப்படித் திரிபுற்றிருப்பினும், அவர்கள் அனைவரின் தன்மானச் சீரழிவுகளும் ஒன்றே! ஒரு சிலர் மாற்றானுக்கு அடிமைப் பட்டிருப்பதாக உணர்ந்தும் அந்நிலைக் காட்பட்டிருக்கலாம்; பலர் அவ்வாறு அடிமைப் பட்டிருப்பதைப் பல்வேறு அறியாமை நிலைகளால் இன்னும் உணராமல் இருக்கலாம்! அதற்காக அவர்களின் அடிமை நிலை என்பது இல்லாமற் போய்விடாது. இந்நிலையில் நமக்கு வாய்ப்பாக அமைந்த ஓர் இனப்போராட்டப் பேரியக்கத்தை, நமக்குப் பிடிக்காத ஓரிரண்டு நடைமுறைத் தவறுகளைக் கரணியங்காட்டி, அதன் கட்டுக்கோப்பை உடைத்துக்கொண்டு வெளியேறுவதென்பது, ஒன்றால் வரலாற்றறிவற்ற, முழு அறியாமையாகும்; அன்றால் தன்மானம் கருதிய முழுத் தந்நலமாகும். அடுத்து, இவர்களோ, இவர்களைச் சார்ந்தவர்களோ இதேபோன்ற தவறுகளைச் செய்யவே மாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி ?

இனி, பெரும்பாலும் ஒரு கட்சி என்றும் சம இரண்டாகப்பிரியவே முடியாது. ஒரு மரத்தினின்று எத்தனைக் கிளைகள்தாம் பிரிந்தாலும், அத்தனைக் கிளைகளினும் ஒன்றேனும் அவ்வடிமரம் போலும் பருமையும் வலிவுமுடையதாக இருக்கவேமுடியாது தமக்குள்கொள்கைச்சிதைவுகளை ஏற்படுத்திக்கொண்டால் தவிர, தாய்க் கட்சியினின்று, ஒரே கொள்கையின் அடிப்படையில், இடையில் ஏற்படும் ஓரிரண்டு அடிப்படைத் தவறுகளுக்காகப், பிரிந்துபோகும் பல்வேறு கட்சிகள் எந்த நிலையினும் ஒன்றிணைய முடியாது. மேலும், முழுக்க முழுக்க அரசியலுக்காகவே தோற்றுவிக்கப்பெற்ற கட்சிகள் என்பவை வேறு; மொழி, இன மரபுகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப் பெற்ற அரசியல் கட்சிகள் என்பவை வேறு. இரண்டாம் நிலை அரசியல் கட்சிகளில் உள்ளுடைவு ஏற்படுமானால், அவை கட்டிக்காக்கப் போவதாகக் கூறும் மொழி, இன மரபுக் கொள்கைகள் சுக்கு நூறாகச் சிதைந்துபோவது உறுதி. முதல்நிலை அரசியல் கட்சிகளின் முடிவு அத்தகையதன்று. இதன் வேறுபாடுகளை உணர்ந்துகொள்ளாத தன்னிலை மேம்பாட்டு உணர்வாளர்களே, சட்டென்று ஓரியக்கத்தினின்று விலகியோடுவதும், தனித்தனிக் கட்சிகளைத் தொடங்கித்


தலைமைப் போராட்டப் போர்களில் சிக்கிச் சிதைந்து போவதுமான நிலையில் உள்ளவர்கள்.

இன்னும் விளக்கமாகச் சொன்னால், தவறுகள் எனப்படுவன எந்த நிலையிலும் எவராலும் செய்யப்படலாம். உலகில் குறைந்த தவறுகளைச் செய்பவர்கள் நிறைந்த தவறுகளைச் செய்பவர்கள் என இரு வேறு வகையினராக மக்கள் இருக்கின்றனரே யல்லாமல், தவறுகளே செய்யாமல் ஒருவருமே இருக்கமுடியாது. பிறவிக்கு அடிப்படை தவறுகளே! உயிர், மன, மொழி, மெய், அறிவு, கால, இடம் எனும் நிலைகளில் தவறுகள் பலவகையானவை. அவற்றில் சில பிறரால் அறியப்படுவனவாகலாம்; பல அறியப்படாதனவாகலாம். இனி, தவறுகள் பொதுவாகலான் அவை தண்டனைக்குரியனவாக இருக்கக் கூடாவென்பதன்று; தவறுகள் தண்டனைக்குரியனவே. ஆனால், அத் தவறுகளைத் தவறுகள் என்று சுட்டத்தெரிந்தவனும், அவற்றுக்குத் தண்டனைகள் தர விரும்புகின்றவனும், அத்தவறுகளைத் தன்னளவில் செய்யாதவனாக இருத்தல்வேண்டும் என்பதே அறம். இதுவே உலக இயற்கை. இதனடிப்படையிலேயே அரசியலுணர்வு மக்களிடையே எழுச்சியுற்றது. ஒரு பொருளை இரண்டாகச் சிதைக்கும் மற்றொரு பொருள், அம்முயற்சியின் பொழுது தன்னளவில் இரண்டாகச் சிதைந்துவிடக் கூடாததாக இருத்தல்வேண்டும். இல்லெனின் பயன் விளையாது.

இனி, மெய்ப் பொருளியலின்படி, அறநிலைக்கு மொழி, இன முன்னேற்ற முயற்சிகள் மாறுபட்டவை அல்ல. எனவே, அம்முயற்சிகளை முன்னின்று செய்வான் ஒருவன், அரசியல் நிலையில் சிற்சில தவறுகளைச் செய்வானாயின், அவனை மேலும் அணுக்க நின்று திருத்த முற்படுவதே பொதுநலங் கருதும் அறமுடையார் கொள்கை. அறவுணர்வு குன்றிய தந்நல வுணர்வாளர்களே, அவன் போக்குகளின் வலிமை மெலிமை உணராமல், அவற்றைப் புறங்காட்டி, அப்பெருநிலை முயற்சி கட்டுக்குலைந்து போமாறு, அவனை விட்டு விலகியோடுவர். இந்நிலைகளையெல்லாம் அடியூன்றப் பார்க்கவியலாத நம் தலைவர்கள் சிலர், முன்னடி வைப்பார். ஓரிருவரின் முயற்சிக்கு ஊறு விளைவிப்பது இரங்கத்தக்கதும், வருந்தத் தக்கதுமாகும், இனி, உலகின் நிலைப்பு நிலையொட்டிய உண்மை முயற்சிகள் என்றும் சாம்பிப்போகாவென்பதை எல்லாரும் நன்கு உணர்ந்து கொள்ளுதல்வேண்டும். எனவே, தமிழியக்கக் கூறுகளைச் சிதைக்கின்ற போக்குகளைத் தமிழர்கள் இனியேனும் தடைப்படுத்திக் கொள்ளுதல்வேண்டும். இறுதியாகப் புதுக்கட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள திரு. நெடுஞ்செழியன் போன்றார்க்கு நாம் கூறிக்கொள்வது, இதுதான். நீங்கள் இதுநாள் வரை கட்டிக்காத்த ஒரு பேரியக்கத்தை வெறும் அரசியல் இயக்கமாகக் கருதியது முதற் பிழை. அதன் தலைமையில் தவறு கண்டவிடத்து அதனை விலக்கவியலாமல் நீங்கள் விலகி வந்தது இரண்டாம் பிழை. அதனை மாற்றியமைக்கும் ஆற்றல் உங்களுக் கில்லாதிருப்பது உண்மையாயின், அதன் வலிமையை இடைக்காலத்தில் ஒப்புக்கொண்டு அதற்கு உங்கள் ஒத்துழைப்பைத் தந்து, காலத்தால் களைய விரும்பிய அப்பிழைகளை இடங்கண்டு களையும் வாய்ப்பை இழந்துபோனது மூன்றும் பிழை.

இனி, திரு. நெடுஞ்செழியனார்க்கும், திரு. அருட்செல்வனார்க்கும் நாம் முடிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றவை இவை: பெரியார் முயற்சியை இரண்டாய்ப் பிளந்த குற்றத்திற்காக இன்னும் நீங்கள் எத்தனையோ கழுவாய்களில் உங்கள் கொள்கைகளைக் கழுவவேண்டி யிருக்கும். ஒன்றுபடத் துடிக்கும் தமிழினத் துண்டங்களை உங்கள் தவறுகளால் மீண்டும் மீண்டும் துணுக்குகளாகச் சிதைக்கின்ற பிழைகளை இனியும் செய்யவேண்டா. அனைவரின் மன வேறுபாடுகளையும அடியோடு மறக்கக் கற்றுக்கொள்ளுங்கள். தமிழினத்தின் பொது மானம் கருதி முனையவேண்டியவிடத்து, உங்கள் தனி மான உணர்வுகளைப் பெரிதாக நினைக்கவேண்டா. முடிந்தால் நீங்கள் இருவரும் ஒன்றுபட்டு, இனச் சிதைவையும் ஒன்றுபடுத்துங்கள். நீங்கள் செய்வது அரசியல் முயற்சிகள் அல்ல; மொழி, இன முன்னேற்ற முயற்சிகள் என்பதை என்றும் மறந்து போய்விடாதீர்கள்! தேவையானால் அரசியலை விட்டு விலகிக்கூட இனத்துக்காகப் பாடுபட நாம் தயங்கக்கூடாது. ‘ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’ என்னும் பழமொழி உங்கட்குத் தெரியாததன்று. அத்துடன் புறநானூற்றுப் புலவர் பெருந்தகை கோவூர் கிழாரின் வரிகளையும் நீங்கள் நினைவில் வைத் திருப்பீர்கள். ஒருவேளை அவை மறந்து போயிருப்பின் மீண்டும் ஒரு முறை நினைவூட்டிக் கொள்ளுங்கள். அவை இவை:

ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி. —(புறம்: 45 : 5-7)



## நன்கொடை

1. கோவை, தடாகம், தென்மொழியன்பர் புலவர் திரு. ந. அருணன், இல. இ. அவர்களின் பெண் குழந்தைக்கு, ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் பெய்வளை என்னும் பெயரிட்டதன் நினைவாக, உரு. 5 நன்கொடை தரப்பெற்றது. குழந்தை பெய்வளை நீடுவாழி எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. படைத்துறைத் தென்மொழியன்பர் க. அய்யாலு தம் பெயரை அறிவரசன் என மாற்றிக் கொண்டதன் நினைவாகத் தென்மொழிக்கு விடுத்த நன்கொடை உரு 10 வரப்பெற்றோம். அறிவரசு நீடுவாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

3. ஈரோடு செங்கோடம்பாளையம், திரு. சென்னிமலை அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 5 அன்பளிப்பாக கொடுத்தார். அவர் த்தைத் தென்மொழி வாழ்த்துகிறது.

# செய்திகள்

**1. ஆறுமுகம்-திருவாண்டாள், திருமணம்.**

புதுக்கோட்டை, கூழிபிறை, தென்மொழியன்பர் செல்வன் ஆறுமுகத்திற்கும், இராங்கியம் செல்வி, திருவாண்டாளுக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் தலைமையில், மீனத்திங்கள் 8 (21-3-77) -ஆம் பக்கல், திருமண விழா இனிதே நடைபெற்றது. திருவாளர்கள் கரு. சுப்பையா, இராம, அன்புவேல் க.இ;பஇ, கா: வெற்றிச்செல்வன் அறி.இ, கல், இ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமண நன்கொடையாகத் தென்மொழிக்கு மணமக்கள் 10 உருபா அன்பளிப்பு வழங்கினர். மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

**2. கோவை, தடாகம், பாவேந்தர் விழா:**

ஆலந்தூர் புலவர் ந,இரா. தமிழவேள் முயற்சியால். கோவை வட்டம் தமிழாசிரியர் கழகச் சார்பில், தடாகத்தில், பாவேந்தர் விழா மேழம் கஉ. (24-4-77) ஞாயிறன்று, நடைபெற்றது. இசைப் புலவர் த. சுந்தரதாசனுர் பாவேந்தர் பாடல்களைப் பாடினுர். தஞ்சை, தொல்காப்பியர் கழகத்தலைவர் புலவர் தி. பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினுர். கோவை, சேரர் கொற்றம் அமைப்பாளர், திருவாளர் தென்மொழி. மறை நித்தலின்பனுர். கு.வே. கிருட்டிணசாமி, புலவர். சா. மருதவாணன் அவர்கள் சொற்பொழிவுக்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் 'பாவேந்தர் கண்ட கனவு' என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினுர். புலவர். பூ.ஆ. இரவீந்திரன் நன்றியுரை நிகழ்த்தினுர். கூட்டம் இனிதே முடிந்தது.

**3. கீழ்ப்பெண்ணுத்தூர், ஆதிமூலம்- சுப்பு இலக்குமி திருமணம்.**

வ.ஆ. திருவண்ணுமலை கீழ்ப்பெண்ணுத்தூர், செல்வன் ஆதிமூலத்திற்கும், செல்வி சுப்புஇலக்குமிக்கும்; மேழம் 19 (1-5-77) அன்று காலை திரு. நாராயணசாமி பேராயக் கட்சித்தலைவர், அவர்கள் தலைமையில், பாவலரேறுபெருஞ்சித்திரனுர் திருமணம் நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினுர். திருவாளர்கள்; ஆத்தூர் மாயவன். (இளைஞர் பேராயக் கட்சித் தலைவர்) தே. பட்டுச்சாமி, சின்ன காமராசு, தென்னன் அறி.இ, கலச இராமலிங்கம் வணி. இ. கோதண்டராமன், எ.காசி, கு. அரிகிருட்டிணம் க இ. ஆப ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் இனிது வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

---

## திருமண வாழ்த்து

4. இராசபாளையம், மேலவரகுணராமபுரம், படைத்துறைத் தென்மொழியன்பர். த. சின்னதுரை-செல்லம்மாள் திருமண நினைவாக உரு 10- நன்கொடை வரப்பெற்ருேம். மணமக்கள் நீடு வாழ்கெனத் தென்மொழி வாழ்த்துகிறது.

# விற்பனையாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை!

தென்மொழி ஒரு கொள்கை இதழ். தமிழர் முன்னேற்றத்திற்குக் கிடைத்த ஒரு படைக்கருவி. எவ்வகையானும் இஃது ஒரு வாணிக இதழன்று. ஒரு சிறு ஊதியமும் கருதாமல், கொள்கையை விற்றுப் பெறும் சிறு விளம்பர வருவாயுமின்றிக் கடந்த பதினெட்டாண்டுக் காலமாகப் பல பேரிழப்புகளுக் கிடையிலும், அகப்புறத் தாக்குதல் களுக்கிடையிலும் சிறிதும் மனத்தளர்ச்சியும் கொள்கை நெகிழ்ச்சியும் இன்றி நடந்துவரும் இவ்விதழின் வீறுநடை, தமிழ் இனத்திற்கே அமைந்த ஒரு மறுமலர்ச்சி வரலாறு. இதற்குத் தடையாயிருப்பவர் எவராயினும் அவர் தமிழினத்தின் முதல் எதிரி! தமிழ் முன்னேற்றத்தின் பெரும் பகைவர்! அறிந்தோ அறியாமலோ இதன் நடை தடுக்குமாறு வீசப்பெறும் ஒரு சிறு கல்லும் தென்மொழிக்கு ஒரு பெருந் தடைக்கல்லாக வந்து அமையும் என்பதை உண்மைத் தமிழன்பர்கள் அனைவரும் கட்டாயம் உணர்ந்துகொள்ள வேண்டுகின்றோம். இந்நிலையில் தென்மொழி இன்றுவரை தடுக்கி வீழ்ந்து விடாமல் தளர்நடை யிட்டேனும் வருகின்றதெனின், அஃது, இவ்விதழுக்குக் கிடைத்த ஊன்றுகோல் போலும் — உயிரூட்டி வளர்க்கும் மருந்து போலும் — அவ்வப்பொழுது தோள் கொடுத்துத் தாங்கும் பெருந்தகையாளர் ஒருசிலரால்தான் என்பது நெஞ்சு நிறைந்த நன்றியொடு நினைக்கத்தக்கது.

இஃது இவ்வாறிருக்க, தென்மொழியை வாங்கி விற்பனை செய்யும் முகவர்களும் இதனால் ஒரு பெரும் வருவாயை எதிர்பார்த்து இயங்குபவர்களாக இருத்தல் இயலாது. மாறாக, அவர்களும் இதன் விற்பனையால் ஒருவகையான் இழப்பை எதிர்நோக்குபவர்களாகவே இருத்தல்வேண்டும். அவ்வாறான தொண்டுள்ளமும் ஈக மனப்பாங்கும் கொண்ட முகவர்கள் சிலர் இல்லாமலும் இல்லை. ஆனால், முகவர்கள் ஒருசிலரோ தென்மொழிக்கு நிலையாக ஊறு விளைவிப்பவர்போல் நடந்து கொள்கின்றனர். அவர்களை நினைக்கையில்தான் மிகவும் வருந்தவேண்டியுள்ளது. அவர்களுக்கு எத்தனை முறை நம் நிலைகளை விளக்கி நினைவூட்டு மடல் எழுதினும், அவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளைப்பற்றித் துளியும் கவலைப்படாதவர்களாகவும் விடை தராதவர்களாகவுமே இருக்கின்றனர். ஆயிரக் கணக்கான உருபா அவர்களிடம் நிலுவையாக உள்ளது தென்மொழிக்குப் பெருஞ்சுமை! கொள்கைச் சுமையோடு விற்பனைச் சுமையும் சேர்ந்து அழுத்தினால் தென்மொழி உயிர் வாழாது. எனவே தென்மொழியின் கழுத்து முரிபடுமாறு நடந்துகொள்ள வேண்டாம் என்று அம் முட்டுக்கட்டை முகவர்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம். தென்மொழியை அவர்கள் இனி வாங்கி விற்காமல் போனாலும் தாழ்வில்லை. தங்கள் கணக்கில் உள்ள நிலுவைத்தொகை முழுவதையும் சூன் மாத இறுதிக்குள் அனுப்பி வைத்துவிட அவர்களை வேண்டிக் கொள்கின்றோம். இல்லெனின் அவர்களின் முழு முகவரியுடன் அவர்கள்பால் உள்ள நிலுவைத் தொகையும் இதழ் வழி அறிவிக்கப் பெறுவதுடன், சட்டப்படி வழக்குமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கை செய்கிறோம். தொண்டுக்குத் துணை நில்லாமற்போனாலும் போகட்டும்;

# ‘சாதி’ ஒழிப்புப் போரை எங்கிருந்து தொடங்குவது ?

— செம்பியன் வல்லத்தரசு —

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”, “ஒன்றே குலம்”, “குலத்தாழ்ச்சி இகழ்ச்சி சொலல் பாவம்” என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்று வரை சொல்ல வேண்டியதற்கும் அதிகமாகவே சொல்லியான பிறகும், புத்தரிலிருந்து பெரியார் வரை பெரும் பெரும் கொடுமைகளைத் தாங்கிச் செயல்பட்ட பின்பும் இந்தச் சாதியெனும் சாக்காடு ஒழிந்தபாடில்லை. உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாததொரு குமுகாய அமைப்பு முறை, நம் நாட்டில் அமைந்துவிட்டது. அங்கே நிறத்தாலும், சிறுபான்மை இனத்தாலும் வேறுபாடு கொண்டனர். ஆனால், நமது நாட்டில் ஆரிய வருகையின் விளைவாக அவர்களால் அவர்களது மேலாண்மைக்காக வலிந்து கற்பிக்கப்பட்ட வருண, ஆசிரமக் கொள்கைகளின் அடிப்படையில் குமுகாய அமைப்பு பிளவுண்டது

ஏற்கனவே இங்கு செய்தொழில் வேற்றுமையால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற, பிறப்பு அடிப்படையற்ற, தொழில்முறைப் பாகுபாடே அமைந்திருந்தது. [ஆரியர் நுழைந்த மற்ற நாடுகளில் இப் பாகுபாடு இல்லாமையால்தான் வருண—சாதி முறை அங்குத் தோன்றவில்லை.] ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள் தம் தொழில் அமைவால் மேற்காணும் ஏதாவதொரு பிரிவில் அடங்கலாம்; மாற்றியும் அமைத்துக் கொள்ளலாம். இதில் எந்த உயர்வு, தாழ்வும் கற்பிக்கப் பெறவில்லை. வருணம் என்பது நிறம், குணம். இதன்படி பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் எனப் பாகுபடுத்தப்பட்டது. வேளாளனும், சூத்திரனும் ஒரே குருதியினரல்லர். வேளாளர், உழவுத் தொழில் செய்பவர்; சூத்திரர் கீழ் மக்கள், இழி தொழிலாளர். அப்படியே, அந்தணரும் பிராமணரும் ஒருவரல்லர். எனவேதான் திருவள்ளுவர் “அந்தணர் என்போர் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர்” என்று பிரித்துக் காட்டி அறிவுறுத்தினர்

தமிழர் பிரிவு முறை, ஆரிய வல்லாண்மையால் ஒடுக்கப்பட்டுத் திரிந்து வருணப் பிரிவாக நிறம் பெற்றது. வருணப்பிரிவு குணத்தி-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தொல்லை தராமலிருப்பின் அதுவே அவர்கள் தமிழுக்குச் செய்யும் பெருந் தொண்டாகக் கருதி மகிழ்வோம்.

இனி, இத்தகைய முகவர்களை எதிர்பாராமல், இதழ்களைத் தொடர்ந்து பெற விரும்புவோர் நேரிடையாக உறுப்பினராகிக் கொள்வதே நல்வழியாகும் என்று கூறிக்கொள்ளவும் விரும்புகிறோம்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

னடிப்படையிலமைவதாக விளக்கப்பட்டு,பின் பிராமண மேலாண்மை யினுலும், நம்மவர் அறியாமையினுலும் பிறப்பின் அடிப்படையாக மாற்றப்பட்டு நிலைத்தது. நான்கு பிரிவுகள் நான்காயிரம் பிரிவு களாகி, ஒவ்வொன்றும் சாதி குலங்களாக வளர்ந்தது. எட்டிப் பட்ட மும், எட்டிக்கொடியும் பெற்ற வணிகர் செட்டியாகி, 'ஷெட்டி' யாகி, 'சேட்'டானுர்; கவண்வீசிக் கழனி காத்தவர் கவுண்டரானுர்; போர்த் தொழில் செய்தவர் மறவராகவும், கைக்கோளராகவும் பிரிந்தனர். ஒற்றுடியவர் கள்வராயினர், அரண்மனைப் பணி செய்தோர் அகம்படியரானுர். ஆற்காட்டுப் போரில் கைக்கோளப் படையும் மறவரும் கலந்து 'படையாட்சி' சாதி பிறந்தது. மைசூர் மலைப்பகுதியில் ஒரு குழுவினர், சேர்ந்து முடிவு செய்து பூணூல் மாட்டிக்கொண்டு பார்ப்பனரானதற்குச் சான்றுண்டு. வருண அமைப்பு குணத்தின் அடிப்படையெனில் அதைப் பாகு படுத்தும் அதிகாரி எவன்? நான் சூத்திரன் (குணத்தால்) என்று எவன் அறிவான், சொல்லுவான்? பிராமணன் மகன் சூத்திரனுகவோ சூத்திரன்மகன் பிராமணனுகவோ அமையலாம் என்பதுகொள்கையள வில் நன்று. ஆனுல் அது பிறப்பாகமுத்திரை குத்தப்பட்டுவிட்டதே! விவேகானந்தரும் காந்தியும் இந்நோக்கிலேயே வருணத்தை மீண்டும் நிலைநாட்ட முயன்றனர். சாதியமைப்பை வருண அமைப் பாகக் கருதிய அவர்கள் முயற்சி நிழலுடன் செய்த போராகியது.

நம் நாட்டில் 'சாதி' மதமாகிவிட்டது. மதத்தையும் விட வலிமையான விலங்காகி விட்டது. நான் ஓர் இந்துவாகப் பிறக் கிறேன்; என் சாதிக்குரியவனுகப் பிறக்கிறேன். இதில் என் உரிமை ஏதும் இல்லை. நான் விரும்பினுல் என் மதத்தை மாற்றிக்கொள்ள லாம். ஆனுல் சாதியை மாற்றிக்கொள்ள முடியாது. மண்ணுங் கட்டிப் பள்ளன் அந்தோணியாகலாம். ஆனுலும் அவன் பள்ளன் தான். பரமசிவ நாடார், பால் நாடாராகித்தான் மத மாற்றம் பெறுகிறுர். ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் சாதி இழிவைப் போக்க மதம் மாறியும் அவர்கள் நிலை மாறவில்லை. அவ்வளவு கடுமையாகச் சாதித் தளை அவர்களைப் பிணித்துள்ளது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று இருப்பை உண்மை யுணர்வைப் பாட முடிந்தது அந்நாளில். இன்று என்னதான் பொதுவுணர்வு பேசினுலும், நமது அன்பு, சாதி என்னும் குறுகிய வட்டத்திற்குள்ளேதான் அழுத்தமாகப் பாய்கிறது. மதம், மொழி, இனம், கட்சி என்ற போர்வைகளால் எப்படி மறைத்தாலும் இவ் வுண்மை அம்பணமாகவே கிடக்கிறது. பொதுவுணர்வு வளர்ச்சி யைத் தடுக்கும் இச்சாதி முறை இயற்கையான வாழ்க்கை முறையை யும் விலக்கிவிட்டது. மனமொத்த இருவர் காதலுணர்வில் ஒன்று பட்டு வாழ்வு பெறப் பெரும் தடைச்சுவராகச் சாதி நிற்கிறது. கடை கெட்ட இதழ்களாலும் கீழ்த்தரமான திரைப்படங்களாலும், தம் முடைய மெலிந்த மனங்கள் சீரழிக்கப்பட்ட அடிப்படை அறிவும்

ஆற்றலும் இயல்பாக அமையவும், அமைத்துக் கொள்ளவும் வாய்ப் பற்ற நம் இளைய தலைமுறையினரின் காளாம்பிக் காதல் (மனச் சிலிர்ப்பு) அன்று. உண்மைக் காதலின் நிலையே அதுதான். ஆடு மாடுகளை இணை சேர்ப்பதுபோல் பெரியோர்களால் உறுதி செய்யப் பெற்று நம் திருமணங்களின் தோல்விக்கும், கற்புநெறிப் பிறழ்வுக்கும் காதலுக்குத் தடைபோடும் சாதியமைப்பே காரணம் என்று கருதவேண்டியுள்ளது.

சாதியை வெறுத்த பெரியோர், அமைக்க வியலாத வருணத்தை வரவேற்றுத் தங்களை அறியாமல் சாதியமைப்பின் நிலைப்புக்கே வழி கோலினர். ஒன்று மட்டும் உறுதி. இனி எந்தச் சான்றோனும் தமிழ் முறையினையோ, வருண முறையினையோ இங்கு நிலைநாட்ட முடியாது. சாதியினையே ஒழிக்கவேண்டும். சாதிக்குக் கரணியம் வருணம். வருணத்தின் பிறப்பிடம் இந்து மதம். நிலநடுக்கோடு, இந்தியா என்பது போல இந்து, இந்துமதம் என்பதும் ஒரு கற்பனையே. இந்தியக் கிறித்துவத்திலும் சாதி இருக்கிறது என்பது ஒரு பக்கம் இருக்க. இந்து மதத்தை ஒழித்துவிட்டால் சாதி ஒழிந்து விடுமா? அப்படியானால் எப்படி அதனை ஒழிப்பது?

ஒரு மந்திரம் போட்டு மக்களின் மதவுணர்வை அழிப்பதா? அல்லது ஒரு சட்டம் போட்டு மதப்பெயர், புராண, மத நூல்களை அழித்து வ்டுவதா? என்ன வழி? இஃது இயற்கையாகவோ அறிவு நிலைக் கொத்ததாகவோ இல்லை. விலங்குணர்விலிருந்து அறிவர் நிலை வரை கோடிக்கணக்கானவரும் கோடிக்கணக்கான மன அறிவு நிலையில் உள்ளனர். எனவே சட்டத்தின் மூலமோ அன்பு நெறி மூலமோ சாதியினை ஒழிக்கமுடியும் என்று எண்ண இயலவில்லை. அப்படிப்பட்ட முயற்சிகள் எல்லாம் இதுவரை தோல்வியே அடைந்துவிட்டன. புலியை மிரட்டி அடக்கி வைத்தாலும் தன் குணத்தை வாய்த்தபோது காட்டிவிடும். ஆனால், பாம்பையன்று, அதன் பற்களையன்று, அதன் நச்சுப் பையினை மட்டும் அழித்து விட்டால் பாம்பின் இருப்பு தீமையாகாது. இப்படி ஒரு வழி இந்தச் சாதி ஒழிப்புக்கு இருக்கிறதா?

இப்படி அணுகுவோம். சாதி இருப்பின் தேவை என்ன? என்பதைக்கண்டு அத்தேவைகளை, தலைவலிக்குக் கரணியமான சொத்தைப் பல்லைப் பிடுங்கி எறிவதுபோல், களைந்துவிட்டால் ஒரு முடிவு ஏற்படாதா? சென்ற நூற்றாண்டில் காலத்தின் கட்டாயத்தால் ஏற்பட்ட சில பண்பாட்டு மாற்றங்களின் விளைவாக சாதியமைப்பையும் இப்படியே ஒழித்துவிட முடியும் என்று முயன்றனர். நீரை யிறைக்க நினைத்தவர்க்கு ஊற்றை அடைக்கத் தோன்றவில்லை.

முதலில் மாந்தரனைவர்க்கும் கல்வியும் செல்வமும் கிடைக்க வேண்டும். அதுவும் நிகராக அமையவேண்டும். மக்களுக்கு அரசியல் விடுதலை மூலமும் அரசியல் சட்டத்தின் வழியாகவும் இதற்கான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனினும் அவற்றைப்

பெறுவதற்கான வழியில் நிற்கும் தடைகளை நீக்க வழி செய்யப்படா நிலையில் அவ்வுரிமைகளால் பயன் என்ன? நாய்க்குப் போட்ட முழுத் தேங்காய்தான். எனவே, வல்லான் வகுத்ததே வழி எனும்படி, சாதி, மத, பொருள்வலி பெற்றவரே மேன்மேலும் கல்வியாலும் செல்வத்தாலும் உயர்ந்தனர். மற்றவரை ஒடுக்கினர். இங்குக் கற்றவர் 35 விழுக்காடு செல்வமோ சிலரிடம்.

நமது பெருமைக்கும் சிறப்புக்கும் நம் முன்னோரைக் கரணியம் காட்டுவதைப் போலவே நம் தாழ்வுக்கும் வீழ்ச்சிக்கும் அவர்களையே கரணியமாக்கவேண்டும், கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களைப் படைத்திருப்பதற்கு நம் குமுகாய அமைப்பில் ஏதோவொரு கரணியம் இருந்திருக்கவேண்டும். அதனை ஒழித்தாலன்றி இச்சாதியினை ஒழிக்க வியலாது. நோய் நாடி, நோய் முதல்நாடி. அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்யாமல் இதுவரை நடைபெற்ற மேற்போக்கான முயற்சிகளுக்கேற்ப மேற்போக்கான விளைவுகளை மட்டுமே காணமுடிகிறது. இன்று ஓரளவு சாதி ஏற்றத்தாழ்வு உணர்ச்சி மங்கியிருக்கிறதே ஒழிய, சாதி வேறுபாடு இம்மியும் ஒடுங்கவில்லை. பழம் பெருச்சாளிகளிடம் மட்டுமின்றி, படித்தவர்களிடமும் மாணவர்களிடமும் இச் சாதியுணர்வு புத்துணர்வூட்டி வளர்க்கப்படுகிறது.

உலக வரலாறு என்பது பெண்ணுக்காகவும், பொருளுக்காகவும், நடந்த போர்களின் பட்டியலே. அவற்றிலும் பொருளே முன் நிற்கிறது. அதைக்கொண்டு எதையும் பெறமுடியும். இன்றும் செல்வ நிலையில் சாதி வீச்சின் தாக்கம் சிறிது மங்கியே இருக்கும். ஆனாலும் நீங்காது. தனிப்பட்டவர் செல்வப் பெருக்காலோ, அல்லது தாழ்த்தப்பட்டோர் செல்வராவதாலோ சாதிஒழியாது. பொதுவாகக்குமுகாயத்தின் கட்டமைப்பு பொருள் வரவினையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அக்கட்டமைப்பின் மேற்கோப்பாகவே சாதி, மத, இலக்கிய மெய்யறிவுக் கோட்பாடுகள் அமைந்திருக்கின்றன. மேற்கோப்பின் மாற்றங்கள் அடிப்படையைப் பொறுத்தே அமையும். குடிசையின் கூரையைப் பிடுங்கிவிட்டு மாடிசட்ட முடியாது. கரணியம் அதற்கேற்ற வலிமையான அடிப்படை இல்லை.

எனவே நாட்டின் செல்வமனைத்தும் மக்களுடையதாகப் பொதுவுடைமையாக்கப்பட வேண்டும். யாரும் யாருக்கும் அடிமையில்லை. தனிப்பட்டவருக்கோ, ஒரு குழுவுக்கோ அஞ்சவேண்டிய, அவரைச் சார்ந்திருக்கவேண்டிய தேவையிருக்கக் கூடாது. தனக்குரிய கடமைகளைச் செய்ய உரிமைபெற்று, உழைத்து வாழ ஒரு தனி மாந்தனால்முடியும் எனில், அவன் தன்னைச்சாதி, குலம், மதம், கட்சி என்ற எந்தக் கட்டுக்குள்ளும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவை அவனது வாழ்வுரிமைக்கு வெளியே இருக்கின்றன. அவன் விரும்பினால் மட்டுமே அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். அவை அவனைக் கட்டுப்படுத்தா. ஆனால் இந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டு

பழக்கப்பட்டவனுக்கு அவை எல்லாம் இடைஞ்சல்களாகவே தோன்றும். தோன்றவே அவை தாமாகவே ஒதுக்கப்பட்டு, அழியும். ஆனால் இன்று அவற்றை மீறுபவனுக்குக் குமுகாயத்தில் எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பது வெளிப்படை.

இவையெல்லாம் ஏற்கனவே பலரால் பலகாலம் உணர்த்தப்பட்ட உண்மைகள்தாம்; எனினும் போதிய விளைவு ஏற்படாத கரணியம் என்ன ? அப்பெரும் மாற்றத்திற்குப் போராடவேண்டிய மக்களின் அறியாமைதான்! முள் செடியைத் தின்னுகின்ற ஒட்டகம், வாயெல்லாம் முள் குத்திப் பீறிடும் குருதியின் சுவையை முள்ளின் சுவையென்றெண்ணி மீண்டும் மீண்டும் முள் செடியினையே நாடுவது போல, மக்கள் தம் அறியாமையினால் வகையறியாது திரிகின்றனர். கேட்டால் எல்லாம் தெரிந்தவர்போல் பேசுகின்றனர்.

முதலில் தங்கள் நல்வாழ்வுக்காக 'மேன்மக்களால்' ஒடுக்கப்பட்டு அறியாமையில் ஆழ்த்தப்பட்ட 12 கோடி தாழ்த்தப்பட்டோர் தங்களை உணரவேண்டும். அதற்கு வழி செய்யவேண்டும். நெருப்பினையொத்த இளைஞர், தந்நலம் மறந்து உண்மையாக உழைக்க வேண்டும். பின்னர் அவர்கள்தம் அரசியல் உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். பிறகுதான் மேற்கூறிய பொருளியல் மாற்றம் ஏற்படப் போராடவேண்டும். இன்றைய பொருளியல் அமைப்பில் பண்பாட்டுப் புரட்சி ஏற்படுத்த முயல்வது 'பெரியாரின் தோல்விதான்'! தம் நெடுநாள் தொண்டிற்குப்பின்; இதை உணர்ந்த பெரியார், ஒரு சரியான மாற்று வழியில் செல்லவியலாதபடி அவரது பாதுகாவல் செல்வர்களால் தடுக்கப்பட்டார். முடிவு தோல்வியே. எனவே இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்ட பின்னணிகளை மனத்தில் கொண்டு உறுதியானதொரு மாற்றத்திற்குப் பாடுபட முனைவோமாக. இக்குறிப்பை முடிக்குமுன் நினைவில் கொள்ளுங்கள் ! விவேகானந்தர் கூறுகிறார் :

"ஆரியரைப்பற்றிக் கூறப்படுகின்ற கொள்கையில் இருக்கின்ற குற்றங்களையும் அக்கொள்கையால் விளைந்துள்ள தீமைகளையும் அறவே நீக்கவேண்டுவது தென்னிந்தியாவின் நலத்திற்கு மிகவும் தேவையாகும். அவ்வாறு நீக்கி, ஆரிய இனமே தோன்றுவதற்குக் கரணியமான மிகச் சிறந்ததாய இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றாய்ப் புகழ்படைத்த தமிழர்களது பழம்பெருமையை அறிவதால் விளையும் நேர்மையான தன்மதிப்பை ஏற்படுத்தவேண்டியது உடனடித்தேவையாகும்." ●

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

0:527 : அன்பார்ந்த பாவலர் ஐயா அவர்களுக்கு, வணக்கம். ஏறத்தாழ ஓராண்டுக்காலமாகத் தங்களின் ஆசிரியவுரையைக்காணு திருந்த எனக்கு இம்மாதத் தென்மொழி (சுவடி 13, ஓலை 8-12) சிறிது உவகை தந்தது; அரிய உணர்வை ஊட்டியது; அதனால் பெரிதும் உயிர் மலர்ச்சியுற்றது! இவ்விதழில் வெளியான தங்களின் ஆற்றல் மிக்க ஆசிரியவுரை அறத்தின் பேராற்றலையும், அதன் அதிநுட்பத்தையும் கோடிட்டுக் காட்டியது. தங்களுக்குச் சிறை வாழ்வு கொடுத்ததும் ஒருவகையில் நோக்குகையில் எனக்கு மகிழ்ச்சியே! ஏனெனில், உள்ளும் பொழுதெல்லாம் உள்ளம் உவக்கும் வள்ளுவப் பெருந்தகையின் எண்ணரும் நுண்ணிய மெய்ப்பொருட் கருத்துகளையெல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துரைக்கத் தாங்கள் பெற்ற சிறை வாழ்வுதானே தூண்டுகோலாய் அமைந்துள்ளது; அதனால்.

வள்ளுவர் வகுத்த ஒவ்வோர் அதிகாரமும் எத்தகைய நுண்மாண் நுழைபுலமும் அதிநுட்பமும் அமைந்தது என்பதையும், ஒவ்வொரு கருத்தும் எவ்வண்ணம் ஆழ்ந்து அகன்று மீமிசை உயர்வு பெற்றுத் திகழ்வது என்பதையும் தங்களின் மிகச்சிறிய ஆசிரிய உரையின் வழிக்கண்டுணர்ந்தேன். (கோவையில் தங்களின் அருமையான சொற்பொழிவைக் கேட்டும் உவந்தேன்). மேலும், பற்பல மெய்ப்பொருள் விளக்கங்களையும் தங்கள் உரையில் கண்டு உணர்வும், ஊக்கமும், தெளிந்த அறிவும் பெறுவதோடு; அதன்வழித் தக்க ஆக்கங்களை விளைவிக்கவும் அம் மெய்ப்பொருள் உரையை மிக்க ஆர்வத்தோடு எதிர்நோக்கி யிருக்கின்றேன்.

தங்களைத் 'திருக்குறள் மெய்ப்பொருள்உரை' எழுதத் தூண்டிய 'வெருவந்த செய்யாமை' என்னும் அதிகாரத்தை முன்பு நோக்கியதற்கும் இன்று அதனை நோக்குதற்கும் எத்துணை வேறுபாடு உள்ளது? "பத்தோடு பதினொன்று அத்தோடு இஃது ஒன்று" என்ற முறையில்தான் இவ்வதிகாரத்தைப் படித்தேனேயன்றி, இவ்வதிகாரத்தின் நுட்பத்தையும், இன்றியமையாமையையும் உணர்ந்துபடித்ததில்லை கருத்துகளில் நிறைந்துள்ள அறத்திறனைப் புரிந்து கொண்டதில்லை. ஆனால், வெருவந்த செய்யும் ஒரு சூழல் இன்று ஏற்பட்டபின்-மேலும், இச்சூழலை ஒட்டி இக்கருத்தைத் தாங்கள் தக்க வண்ணம் எடுத்துரைத்தபின் தான் 'வெருவந்த செய்யாமை' என்னும் அதிகாரத்தின் விழுமிய மேன்மை வழுவின்றித் தெரிகின்றது; அதன் வலிமை புரிகின்றது.

ஒவ்வோர் அறக் கருத்திற்கும் உரிய சூழல் தோன்றிய பின்தான் அதன் மெய்ம்மையும் மேன்மையும் தெளிவாகின்றது. உலகிற்குத் தேவையான அறக் கருத்துகள் அனைத்தையும் வள்ளுவர் தம் நூலில் மிகச் செப்பமாகத் தெரிவித்துள்ளார். அப்படியாயின், அவர் தம்

வாழ்வில் தாம் கூறிய கருத்துகளுக்குரிய நிகழ்ச்சிகளை–சூழல்களைக் கண்டிருக்க முடியுமா? துய்த்திருக்க முடியுமா? என்ற வினு பலருக்கு எழலாம். இதற்கு விடை 'முடியாது' என்பதே!

ஏனெனில், அத்தனைக் கருத்துகளுக்குமுரிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒருவர் நேரே காணவேண்டுமாயின் அவர் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கவேண்டும். இது நிகழ இயலாது. ஆகையால் வள்ளுவர் அத்தனைக் கருத்துகளையும் மிக நுட்பமாக உணர்ந்து கூறியிருப்பது அவருடைய நிகரற்ற பேரறிவுக்குச் சான்றாக நிற்கிறது. உலகப் பேரறிஞர்களின் ஒப்பற்ற தலைமகன்–தனி மகன் என்னும் அணியார்ந்த நனி சிறப்பிற்குக் கணித்திட இயலாத் தகுதிபெற்றவர் வள்ளுவத் தமிழ் மகனே என்னும் வானுயர்ந்த பெரும்புகழ் வள்ளுவரை நாடி வருவதைக் காண்கின்றோம்.

மக்கள்தம் நல்வாழ்விற்குத் தக்கவழி சொல்லிய வள்ளுவரே உலகின் அறிவு வள்ளல். அவ் வள்ளலின் வள்ளற்றன்மை உலகினர்க்கு வளம் கொடுக்கத்தக்க தூய பணியைத்தான் தாங்கள் இப்போது தொடங்கியுள்ளீர்கள். மிகமிகச் சுருக்கமாகத் தென்மொழி இதழில் தாங்கள் காட்டிய அறத்தின் வலிமையை மீண்டும் இவ்விடத்தே குறிப்பிட்டு, அக்கூற்று அணுவளவும் வழுவாது தன் ஆற்றலைக் காட்டிச் சென்ற அருமையையும் நினைந்து இம்மடலை நிறைவு செய்கின்றேன்.

"மக்களின் வாய்கள் மூடப்படும்பொழுது அறம் வாய் திறக்கிறது! மக்களின் கண்கள் குருடாக்கப்படும்பொழுது அறம் கண் விழிக்கிறது! மக்களின் காதுகள் செவிடாக்கப்படும்பொழுது அறம் காது கொடுக்கிறது! மக்களின் கைகள் கட்டப்படும்பொழுது அறம் கையவிழ்க்கிறது! மக்களின் வாய்கள் அடைக்கப்படும் பொழுது அறம் வாயசைக்கிறது! மக்களின் மனத்தில் நடுக்கம் தோன்றும்பொழுது அறம் அரசுக் கட்டிலை நடுங்க வைக்கிறது!"

ஆகா! எத்துணை இயல்பான–இயற்கையான – இன்று நம்நாட்டில் நாம் கண்ணாரக் கண்ட மெய்ம்மைகள். ஆற்றல் வாய்ந்த ஏற்றமிக்க அறத்தின் புறப்பொருளே இத்துணை வலிமை பெற்றதாயின் அதன் வானுயர்ந்த அகப்பொருள் (அதனைத் தாங்கள் இன்னும் எடுத்துரைக்கவில்லை) எத்துணை வன்மையும் நுண்மையும் வண்மையும் உடையதாயிருக்கும்!

இவ்வறத்தின் ஆற்றலையன்றோ உலக மக்களெல்லாம் தம்மூளையின் நினைவுப் பகுதியில் என்றும் நிலைத்திருக்குமாறு பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய நுட்பமிகு அறிவுச் செல்வங்களை மேன்மேலும், தாங்கள் எங்களுக்குத் தொடர்ந்து வாரி வழங்க வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். வணக்கம். தங்கள் அன்பன்.

—பொன் முகிலன். (புலவர். பொ. முனியப்பன்) கூகலூர் ஈரோடு.

# உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரனர். —

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

## 2. காத்தல் நிலை.

காணிப்பு காத்தல்; கருதல்; கவலுறுதல்
கோணிப்பே உள்ளங் குலைவுறுதல்—பேணித்தன்
ஆக்கங் கணக்கறிந்தே அல்வழிக்குக் காப்பிட்டால்
ஏக்கங் குறைக்கும் இழிவு ! 57

பொழிப்பு : காத்தல் என்பது ஒரு வினையைக் கண்காணித்தலும், அதன் நலத்தையே எண்ணுதலும், அதன் சரிவுக்கு வருந்துதலும் ஆகும். உள்ளம் தன் உறுதியில் குலைவுறுமாஞல் வினையில் நொடிதல் நேரும். இவ்வகையில் எண்ணி வினை நிலையைப் பேணிக் கொண்டு, வருகின்ற ஆக்கத்தைக் கணக்கிட்டு, வினைக்குப் பொருந்தாத வழிகளில் தன் உள்ளம் செல்வதைத் தடுத்துக்கொண்டு இயங்கிஞல் ஒரோவழி வினைச்சரிவு வந்தாலும் அதஞல் வரும் மனத் துன்பத்தை அது குறைத்துவிடும்.

## 2. ON SAVING.

Saving entails concern, thought, watch;
Swerving's when heart fails in firm catch;
Off bad, on ways that increase tend;
That'll misery by decrease fend. 57.

Savings call for a keen watch, deep thought, and over whelming concern over any slip. Swerving indeed comes through heart's failure in firm determination. With eye on up-keep, keep on to ways that will tend to increase the income and keep off bad ways that will wipe it. That done, even in case of a chance slip in deed,(you)can easily ward off the consequent misery.

## 3. இழத்தல் நிலை.

இழப்பறி யாமை உழைப்பின்மை என்றும்
குழப்பில் துறைப்புலத்தார் கொள்க—உழப்பழியார்க்
கில்லாகும் தேக்கமொன் றுற்றக்கால் அஃதான்றே
வெல்லாகும் ஊக்க விறல். 58

பொழிப்பு : ஒரு வினையின் முடிவில் இழப்பு ஏற்படுமாயின் அஃது அவ்வினை பற்றிய அறியாமையாலும், அதனில் முற்றும் ஈடுபட்டு உழைக்காமையாலும் ஏற்பட்ட தென்றெண்ணிக்கொள்க. என்றும் மேற்கொள்ளும் வினைத்துறையில் குழப்பமில்லாது தெளிந்த அறிவுடையவரைத் துணையாகக் கொள்க. முயற்சி அழியாதவர்க்கு என்றும் வருவாயில் தேக்கம் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஒருகால் ஏற்படுமாயின் அதுவே அம்முயற்சியில் அவர் பொருந்தி வெற்றி பெறுவதற்குரிய ஊக்கத்தைக் கொடுக்கும் சிறப்பு நிலையாகும் என்று தெளிக.

## 3. ON LOSS.

Lack of knowledge, labour is loss;
Ever do have expert's pass.
Tireless work knows no income stop.
Coming aids reach eminence's top. 58.

Loss that comes at the end of a job is mainly due to lack of knowledge about and keen interest in it. While taking up any work on hand, consult always the clear-headed expert in that line. For those of tireless labour, never will there be any stagnation in income. Even if there be any, that will goad the worker on and help him reach eminence.

## 4. கல்வி நிலை.

காட்சி கருதல் கவனித்தல் கற்பவற்றை
ஆட்சிப் புலனுழுதாங் காய்ந்தறிதல்—மாட்சி
தெளிதல் தெளிந்தவற்றைத் தேர்தலெனக் கல்வி
ஒளிர்தல் உயர்தல் உயிர்க்கு ! 59

பொழிப்பு : ஒருவர் கட்புலனால் ஆர்வத்துடன் காண்கின்ற காட்சி வழியாகவும், கண்டவற்றை மனவுணர்வுக்குட்படுத்தி அவை பற்றிக் கருதிப் பார்க்கின்ற வழியாகவும், அதன்வழி கிடைக்கப் பெற்ற மனவுணர்வைக் கொண்டு, மேலும் மேலும், காட்சியால் மட்டுமன்றிக் கேள்வியாலும், நுகர்ச்சியாலும், சுவையினாலும், ஊறுணர்வினாலும் பெறற்குரிய உணர்வு நிலைகளை ஊன்றிக் கவனித்தல் வழியாகவும், அவ்வாறு அறிந்தவற்றைத் தமக்குற்ற அறிவுப் புலனது ஆளுமையின் கீழ்ப்படுத்தி, ஆராய்ந்து அறிந்து, அவற்றின் பெருமையைத் தெளிந்து கொள்ளுதல் வழியாகவும், அவ்வாறு தெளிந்த பல்வேறு அறிவு நிலைகளுள் என்றும் உளதாகிய மெய்ந்நிலையைத் தேர்ந்து கொள்ளுதல் வழியும், கல்வி சிறந்து விளங்குதல், படிப்படியாய் உயிர்களை உயர்த்துவதற்காம் என்க.

## 4. ON EDUCATION.

Sight, thought, care and right use of things
Learnt, search whence eminence springs,
Clearness, choice to education lead
Lastly life's name and fame to fend. 59.

What is keenly observed is taken through the senses and subjected to the feelings of the mind. Then it is thought over. To this is added over and again what is got at various stages of hearing, smell, taste and feeling. Intelligence then analyses with studied care and is clear about the eminence of things to be got at. By selection at the various stages and getting at the true thing, education becomes brilliant. By and by, it becomes an invaluable aid to life.

## ௫. பண்பு நிலை

பண்புளத்துச் செல்வம்; பருச்செல்வம் புன்முயல்வால்
மண்பிறந்த யார்க்கும் மலியுமாம்.—நண்புறுதி
காக்கும் நடைவலிக்கும் கற்றார் கவினுயர்த்தும்
ஆக்கும் புகழ்நலன்கள் ஆம்! 60

பொழிப்பு : பண்பு, உள்ளத்தின் செல்வம். பிற பருமைச் செல்வங்கள் புல்லிய முயற்சிகளாலும் இம்மண்ணுலகில் பிறந்திருக்கின்ற எவரிடத்தும் மலிந்துவிடும். எனவே அது சிறப் புறுவதில்லை. ஆனால் உலகின் நுண்மைச் செல்வமாகிய இப்பண்புச் செல்வம், நட்பின் உறுதியைக் காத்துக்கொள்ளும்; தம் வாழ்வியல் போக்கிற்கு மிக்க வலிமையை உண்டாக்கும் ; கற்ற அறிஞர்க்கு இப்பண்புச் செல்வம் இருப்பின் அவர்களது பெருமையை அது மேலும் உயரச் செய்யும். எல்லாவகைப் புகழ்ச்சிகளையும், வாழ்வு நலன்களையும் அது வருவித்துக் கொடுக்கும்.

## 5. ON CULTURE.

Heart's riches are culture. Riches
Material each man reaches.
Ensures lasting friendship, strengthens
Their life; the learned's fame heightens. 60.

Culture is the heart's riches. Meterial riches even the man in the street has. Culture ensures lasting friendship and strengthens the ways of our lives. It heightens the fame of the learned, if only they have it.

# 13. ஒப்புரவியல்.

### 1. ஊண் நிலை

ஒக்க உணவும் உழைப்பும் ஒருங்கமைக்கும்
தக்க முறையே தலையென்க—பக்கவெலாம்
மாணன்றி வேண்டும் மனத்து விழைவென்ப
ஊணின்றி இல்லை உயிர் ! 61.

பொழிப்பு : எல்லார்க்கும் பொருந்தும்படி உணவு வாய்ப்பு களையும் உழைப்பு வாய்ப்புகளையும் ஒரே நிலையாக அமைத்துக் கொடுக்கின்ற தகுதியான நெறிமுறைதான் சிறந்தது என்க. அவற் றின் புறத்தாய பிற நலன்கள் எல்லாம் பெருமைக்குரியனவும் வேண்டும் என்கின்ற மனத்தின் விழைக்குரியனவுமே ஆகும். உயிர் வாழ்க்கை உணவின்றி இல்லையாகலின், பிற நலன்களுக் குரிய அமைப்புகளைக் காட்டிலும் உணவு நிலை வாய்ப்புகளே முதல் தேவை என்க.

## 13. ON PROPRIETY.

### 1. OF FOOD.

Food, work to suit all are the best;
To secure will on methods rest;
All else show and desire reveal;
Good food, life' needs e'er as its weal. 61.

The method that affords opportunities for food and work to suit all tastes is the best. All else that is good will surely rest on empty show and one's desire to own. As food is very essential for life, of the ways and means to seek advantages in life, that which arranges for food is the best.

### உ. நடுவு நிலைமை.

தானும் பிறவும் தனியென் றறியாமை
மானும் மனத்தின் மலிவிடர்கள்!—ஊனுடம்பு
வாய்த்த உயிர்க்கெல்லாம் வாழ்க்கை பொதுவென்றே
காய்த்தல் அறுத்தல் கடன்! 62.

பொழிப்பு : தாமும் பிற உயிர்களும் இவ்வுலக நலன்களைத் துய்ப்பதில் தனித்தனியாம் என்னும் அறியாத தன்மையால் மயங்குகின்ற மனத்தினது மலிந்த தன்மைகளே இடர்களாகும். ஊனினால் நிறைந்த உடம்புகள் வாய்க்கப்பெற்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் இவ்வுலகின்கண் அமைந்த வாழ்க்கை பொதுவினதாகும் என்று கருதி, இங்கு விளைகின்ற நலன்களையெல்லாம் அனைத்துயிர்களும் வேறுபாடின்றி எடுத்துக் கொள்ளுதலே அவ்வவற்றுக்குரிய கடமையாகும்.

### 2. ON CHARITY.

Heart's acme is charity. To care
For life's welfare's man's spotless fare.
Endowment's rich old ways to hitch
Is low; it finds poverty's pitch. 62.

The highest point of heart's perfection is charity. To care for life's welfare in a spotless way, without recourse to deceit, is man's prime duty. Ignoring the spirit of this common course, to donate funds out of one's abundant wealth as endowments for various charities is in no way proper. This, as sanctioned by the ancients, Only adds to the social evil of accumulating wealth in the hands of a few and the consequent poverty of the many.

### ௩. ஈகை நிலை.

உள்ளொண்மை ஈகை! உயிர்கள் நலம்பேணும்
கள்ளன்மை மாந்தக் கடனாகும்—வள்ளண்மை
என்றும் உயர்வன்றே இல்லாமை பேணுமொரு
தொன்று முயல்வே அது! 63.

பொழிப்பு: உள்ளத்தின் விளங்கிய தன்மைதான் ஈகை. உயிர்களின் நலத்தைப் பேணிக் காக்கின்றதும், அவர் நலத்தைக் கள்ளத்தால் திருடிக் கொள்ளாததுமான தன்மை மக்களுக்கே உரிய கடமையாகும். இப்பொதுவான தன்மையைப் பேணாமல், ஒருவரின் மீறிய நலன்களைப் பிறர்க்குக் கொடையாக அளிக்கின்ற வள்ளல் தன்மை என்றும் உயர்வாகாது. அது குமுகாயத்தின் ஒரு சாரார்க்கு இல்லாத தன்மையைப் பேணி வளர்க்கின்ற பழைமையான ஒருவகை முயற்சியே ஆகும்.

### 3. ON EQUITY.

To take self, others separate
Is ignorance and confused prate
To all embodied life's common;
Produce as life's needs do reckon. 63.

To regard enjoyment of all worldly things by self and other beings as quite distinct is natural to the ignorant and is born of the confused state of mind Taking worldy life to be common for all embodied souls, it is but proper to share all benefits of earthly produce with the others without any distinction whatsoeyer.

## 4. துன்பின்ப நிலை.

கல்வி தொழிலீட்டம் துய்ப்புக் களிப்பைந்தும்
செல்வர்க்கே என்னும் நிலைசெகுக்க—இல்வகையால்
துன்புறுவார் இன்றித் துடைக்க; தொகையுலகில்
இன்புறுதல் எல்லவர்க்கும் என்று. 64.

பொழிப்பு : கல்வி, தொழில், ஈட்டம், துய்ப்பு, களிப்பு ஆகிய ஐந்து நலன்களும் செல்வர்களுக்கே உரிய வாய்ப்பு என்னும் நிலையைக் கொல்லுக. இல்லாமை நிலைகளால் துன்புறுவார் இல்லாமல் தவிர்த்து விடுக; அனைத்து நலன்களும் நிறைந்த உலகில், அவற்றால் பெறுகின்ற இன்பநிலை எல்லார்க்கும் உரியது என்று எண்ணி.

## 4. OF PLEASURE AND PAIN.

Learning, work, earning, intake, joy
As for the rich you should destroy;
Suffering through this do wipe out,
That to all in world joy may sprout. 64.

The attitude of regarding the five benefits of worldly life, namely, learning, work, earning, enjoyment and the consequent pleasure as solely due to the rich should go. There being no suffering through want should be ensured, on the distinct understanding that all benefits of which the world is full is common to all.

## 5. உடைமை நிலை.

உலகுடைமை யார்க்கும் உடைமை உழைப்பால்
இலகுநலன் யார்க்கும் இயைபாம்—அலகழியாக்
காக்கும் அரசே அரசென்க! கள்ளத்தின்
ஊக்கும் உரவோர் உகுத்து! 65.

பொழிப்பு : உலகின் அனைத்து உடைமைகளும் அனைவரின் துய்ப்புக்கும் உரிய உடைமைகளாகும். ஒவ்வொருவரின் உழைப் பாலும் விளங்குகின்ற நலன்கள் அவ்வவர்க்கும் உரிமையாகும். இவ்வகையில் அளவு குறையாமல் காக்கின்ற அரசையே சிறந்த அரசு என்று கொள்க. அஃதன்றி ஒருவர் நலத்தைப் பிறர்க்காக்கும் கரவுத் தன்மைக்கு மக்களைக்கொண்டு செலுத்தும் திறன் மிகுந்த வர்களை வீழ்த்துதல் செய்து!

## 5. OF POSSESSION.

Worldly objects properties form;
Benefits for all as have a charm;
To give safeguards as such is rule
To aid cheat's good is sure misrule. 65.

Objects of the world are commom properties for the enjoyment of all. Benefits that accrue through one's labour are solely due to that particular person. That gevernment which guarantees this is the best. When on the contrary there is deceit that makes over the beneflts to others. the skill therefor should be totally destroyed.


## பழைய படிகள் சலுகை விற்பனை!

### தென்மொழி அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

*தமிழ் நலங்கருதியும், அறிவு விளைவு நோக்கியும், பழந் தென் மொழி இதழ்கள், சுவடி 10 முடிய. சில இடை ஓலைகள் தவிர்த்த அனைத்து ஓலைகளும், தனிப்படி ஒன்று 25 காசு மேனி விற்பனைக்குக் கிடைக்கும்.*

*இச்சலுகை விற்பனை இரண்டு மாதங்களுக்கு மட்டுந்தான்!*

*பழைய இதழ்கள் கிடைக்காத அன்பர்கள் தங்களுக்கு வேண்டும் மொத்த இதழ்களுக்குரிய தொகையுடன் அஞ்சற் செலவையும் சேர்த்து விடுத்து. உடனே படிகளைப் பெற்றுக் கொள்வார்களாக.*

*100 படிகளுக்குமேல் பெறும் விற்பனை முகவர்களுக்கு 25 விழுக் காடு கழிவும் கொடுக்கப்பெறும்.*

*உடனே முந்துக! மாணவர்களையும் அன்பர்களையும் ஊக்குக!*

*—அமைச்சர் தென்மொழி, சென்னை–5.*

# தனிம வரிசை

இல். க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி, செய்யாறு-604407.

## 8. வெள்ளி (SILVER) Ag $^{108}_{47}$

"வெள்ளியில் தான் அணிகலன் போட்டு அழகு பார்க்கப் பொருள்நிலை இடம் தரவில்லை. அதனுல் என்ன! கவலையை விடு. தங்கத்தில் செய்து அணிந்து கொண்டால் போயிற்று'' என்று தம்மைத் தேற்றிக்கொண்டனர்.—யார்? பழம் எகுபதிய மக்கள். ஏனெனில் கி. மு. 1500 முதல் கி. மு. 3000 வரை—1500 ஆண்டுக் காலமாக எகுபதில் வெள்ளி தங்கத்தைவிட மிகுந்த விலை மிக்கதாக விளங்கியது. கிடைத்தற்கு அரியதாகவும் இருந்தது.

கி. மு. 4000 வாக்கில் வாழ்ந்த எகுபதிய அரசர்களின் கல்லறைகளில் வெள்ளியணிகள் காணக் கிடைக்கின்றன. எனினும் செம்பையும் தங்கத்தையும் கண்டறிந்த பின்புதான் மக்கள் வெள்ளியை அறிந்தனர்.

வெள்ளி தனியாகக் கிடைப்பது மிக அரிது. பல இயற்கைத் தாதுக்களுடன் இணைந்து கிடக்கும் வெள்ளியை, வெள்ளித் தாதுக்களில் இருந்து புடமிட்டு மீட்கும் முறை கிறித்துவுக்கு முன்பிருந்தே வழக்கில் உள்ளது. நிலத்தில் இரும்பின் இருப்பு கோடிப்பங்கு எனின் வெள்ளியின் இருப்பு வெறும் 2 பங்குதான். அஃதாவது 50 இலக்கத்தில் ஒரு பாகம்.

தங்கத்துக்கு அடுத்தபடியாக மெல்லியன்மையும், நீள் தன்மையும் (Malleability and ductility) உடைய மாழை வெள்ளிதான். வெள்ளியை ஓர் அயிர மாத்திரியில் (மில்லி மீட்டரில்) 400-இல் ஒரு பங்குத் தடிமம் உள்ளபடலம் ஆகவும் ஆக்க இயலும். வெள்ளி துருப்பிடிக்காதது.

பழங்காலத்தில் இருந்தே காசு அச்சிடப் பயன்படும் மாழை வெள்ளியே. உலகத்தின் முதல் தங்கப் படித்தரம் (Gold standard) எனக் கருதப்பெறும்.

"ஒரு பங்கு தங்கத்துக்கு இரண்டரை மடங்கு வெள்ளி'' என்ற எகுபதிய அரசன் மெனசு காலத்துக் (கி. மு. 3500) கூற்று அக்காலத் தங்க வெள்ளி மதிப்பை எடுத்துக் காட்டுகிறது.

வெள்ளியின் வெப்பக் கடத்தம் (Thermal Conductivtiy) மிக அதிகம். எனவேதான் வெள்ளிக் குவளைகளில் வைக்கும் சுடு நீர் விரைந்து ஆறி விடுகிறது. வெள்ளியின் மின்கடத்தமும் (Electrical Cunductivity) மிகுதியானதே. இதனால்தான் மாற்றெதிர்ப்பான் (Transister–செலினன்) வானொலிப் பெட்டிகளில் மின் சுற்றுகள் (Electrical circuits) யாவும் வெள்ளிமையால் அச்சிடப்படுகின்றன.

ஒளிப்படப் பதிவுப் படலச் சுருள்களும் (Film rolls), தாள் களும் வெள்ளி புரோமைடு பூச்சுடையன. கண்ணோய்களுக்குச் சிறந்த மருந்து வெள்ளிக்காலகை (நைட்ரேட்.)

**வெள்ளியின் பெயர் :**

> கருதிய சுல்லு, தாரம், களதௌதம், வெண்பொன்
> இரசதம் வெள்ளியின் பேர். [ஞேடும்
> (மண்டலபுருடர் 6;9)

வெண்மைக்கான சுல், சுல்லு என்ற தமிழ் வேர்ச்சொற்கள் வெள்ளியைக் குறிக்கும். 'சுல்'லும் ஐரோப்பிய மொழிகளின் Silver, Seolfar என்ற சொற்களும்; மொழிநிலையில் இரண்டாம் படிநிலைத் தொடர்புடையன. சுல்—Silver வெண்மை என்று பொருள்படும். htch அல்லது hd என்பது வெள்ளியைக் குறிக்கும் எகுபதியச் சொல்; வெள்ளியின் எபிரேயச்சொல் (Hebrew word) Kesaph என்பதற்குப் 'பளபளக்கும் வெண்ணிற மாழை' என்பது பொருள். Argyros என்ற கிரேக்கச் சொல்லும், Argentum என்ற இலத்தீன் சொல்லும் சுட்டும் வேர்ச்சொற்கள் 'வெண்ணிற', 'ஒளிரும்'; 'பளபளக்கும்' எனப் பொருள் தருவன.

"தங்கத்தைவிட மிகுதியாய்ச் சூரியனைப்போல் பளபளக்கும் மாழை" என பிளினி (Pliny) வெள்ளியைக் குறிக்கிறார்.

**பழங்கதையில் வெள்ளி :** தங்கம் சூரியனை ஒத்ததாகவும், வெள்ளி நிலாவை ஒத்ததாகவும், தங்கம் மாழைகளின் அரசன் என்றும் வெள்ளி அரசி என்றும் கருதப்பட்டு வந்தது. இலத்தீனில் வெள்ளிக்கு மதி (Luna) என்றொரு பெயரும் உண்டு. உரோமரின் பழங்கதைகளில் அவர்தம் Diana, Luna என்ற மதிக் கடவுளர்கள் வெள்ளியுடன் தொடர்புறுத்தப் பெற்றனர். வெள்ளிக்குரிய பழங் குறியீடு பிறைமதிதான்.

டால்ட்டனின் குறியீடு (S). Argentum என்ற இலத்தீன் சொல்லின் முதல் இரு அசைகளின் முதல் ஒலிப்புகளைக்குறித்து Ag என்று பெர்சீலியசு குறித்தார்.

## 4. இரும்பொன் (IRON) $Fe^{56}_{26}$

செம்பொன்—செம்பு = சிவந்த மாழை ; அம்பொன் — அழகிய மாழை = தங்கம்; வெள்ளி—வெள்ளிய மாழை. சிவப்பையும் அழகையும் ஏன் வெண்மையையும் கண்டோம். கருப்பைக் காணவேண்டியதுதானே! "கருப்பு என்ருல் கட்டித் தங்கம்" என்பது பழமொழி. எல்லா மாழைகளிலும் மிகுதியான பயனை அளிப்பது இந்தக் "கருப்புத் தங்கம்" தான்.

பெயர்க்கரணியம் : இர்—இரு—இருள்—இருமை = கருமை. 'இருள்' இல் இருந்து 'கருமை'க் கருத்துப்பிறக்கும். கரிய நிறம் உள்ள பன்றியை 'இருள் நிறப் பன்றி' (தொல்காப்பியம் 1568) என்று குறித்துள்ளனர். எனவே கருமை நிறம் உள்ள மாழை (Metal)யை இரும்பொன் (= கரிய தாது) என்றனர். இரும்பொன்—இரும்பு என்ருகும். இரு(ம்பொ)ன்—Iren என்ற ஆங்கில சாக்சானியத்தில் (Anglo Saxon) இருந்து Iron என்று ஆங்கிலத்தில் வழங்கப்பெறும்.

வரலாறு : மாந்தன் முதலில் பயன்படுத்தியது விண்ணிரும்பே! மண்ணிரும்பு அன்று! அஃதாவது விண் கற்கள் (Meteorites) இரும்பால் உருவானவை. இந்த விண் கற்களில் 7·5% பூசியம் (Nickel) இருப்பதால் இவை அழிவுறுவதில்லை. எகுபதில் கெர்சா (Gerzah) என்ற இடத்தில் கண்ட இரும்புக் கோலிகள் விண்ணிரும்பால் செய்யப்பெற்றவை. அதன் காலம் கி. மு. 3500. அக்காலத்தில் விண்ணிரும்பு தங்கத்தைவிட விலை மிகுதியாய் இருந்தது. பழங் கற்காலத்தாருக்கு ஆயுதம் செய்யப் பயன்பட்டது விண்ணிரும்பே.

கி. மு. 2500—கி. மு. 3000—வாக்கில் எகுபதியர்கள் (Egyptions) இரும்புக் கருவிகளைக் கையாண்டனர். கி. மு. 2200-இல் இரும்பு உலைகளும் இருந்திருக்கின்றன. எகுபதியர், கிரேக்கர், பாலசுதீனியர் ஆகியோருக்கு மிகமுன்னுளிலேயே இந்தியர் இரும்பை அறிந்திருந்தனர். விரைவில் துரு ஏறி இரும்பு அழிவுறுவதால்

அதன் பழமையை அறியக் கூடவில்லை. இரும்புக்குத் துரு ஏன் ஏறு கிறது தெரியுமா ? பிளினி கூறுகிருர் :

"இரும்பின் பேருதவியாலேயே நாம் வீடுகளைக் கட்டு கிறோம்; பாறைகளைப் பிளக்கிறோம். — இன்னும் வாழ்வுக் குப் பயன் ஆன எத்தனையோ பணிகளைச் செய்கிறோம். ஆனல் இதே இரும்பால்தான் போர்களும், கொலைகளும், கொள்ளைகளும் நடக்கின்றன. அம்மட்டோ? இந்த இரும்பு இறக்கை கட்டி ஏவுகணைகள் ஆக எத்துணை அழிவை உண்டாக்குகிறது. எனவே இயற்கையன்னை, தனக்கே உரித்தான அறச்செயலால் 'அல்லவை செய் தார்க்கு அறம் கூற்ருக" இந்த இரும்புக்குத் துருப்பிடிக் கும் தண்டனையை அளித்துள்ளாள். அழிவை உண்டாக் கும் இரும்பு, வேறு எதனையும்விட எளிதில் அழிந்துவிடு கின்றதன்றே!"

இரும்பு துருப்பிடிப்பதற்கான அறிவியற் கரணியம் : சுற்றுப் புற ஈரிப்பில் (ஈரப்பசையில்) உள்ள புளியத்தில் (Acid) இரும்பு சிறிது கரைந்து காற்றில் உள்ள கரியிரு உயிரகை (Carbon -di-oxide)யுடன் கூடி Ferrous ion ஆகிறது. அக்கால் நீரகை (Hydrogen) உமிழப்படுகிறது.

இரும்பின் இருப்பு: உலகில் மிகுதியாகக் கிடைக்கும் மாழைகளுள் இரண்டாவது இடத்தையும், தனிமங்களுள் நான் காவது இடத்தையும் பெற்ற இரும்பு, தனி இரும்பாகக் கிடைப்ப தில்லை. இயல்பாகக் கிடைக்கும் இரும்பில் பிற கலப்புகளோடு சிறிது கரியும் சேர்ந்திருக்கும்.

இரும்புப் பிரிப்பு : நிலத்துள் உறைந்த குழம்புப் பாறை யில் 5 விழுக்காடு இரும்பு உள்ளது. 1600 கெல்வின் வெப்ப நிலை ஊதுலையில் இந்த இரும்புக் கனியத்தை கரி, சுண்ணக்கல் முதலிய வற்றோடு சேர்த்து எரித்து தனிம இரும்பைப்பிரித்து எடுக்கலாம்.

ஒளிர்மம் (Cobalt), கல்லி (Silicon), சுற்பொறை (Sulphur) மாங்கனியம் (Manganese), பொசுப்பொறை (Phosphorus) போன்றவை சிறிதளவு கலந்துள்ள இரும்பு வார்ப்பிரும்பு ; கலப்பைக் களைந்து மேலும் தூய்மையாக்கினல், உருக்கு அல்லது எஃகு, தேனிரும்பு போன்றவை கிடைக்கும்.

சூடுபடுத்திய இருப்புக் கூடிகை (Iron Compound) களின் மீது நீரகை (Hydrogen) யைப் பாய்ச்சியும், மின்படிவ (Electrode-posit) முறையிலும் தனி இரும்பைப் பிரித்து எடுக்கலாம்.

உயிர் வாழ்வுக்கு இரும்பு : பருகும் நீரில்கூட இரும்புச் சாரம் உள்ளது. பயிர், மற்றும் உயிரினங்கள் அனைத்திலும் அயச் சாரம் இருக்கிறது. அரத்தத்தின் (Blood) குருதிக் குளிகை (Haemoglobin) யின் இரும்புச் சாரக் குறைவால் ஏற்படும் நோய் தான் சோகை (Anaemia). இதனை ஈடுசெய்ய செரிமானப் பக்குவம் மிக்க இரும்பை (Colloidal iron) உட்கொள்ளவேண்டும்.

இரும்பு, அன்மங்களுடன் (Non metals) எளிதில் கூட வல்லது. அயபக்காந்த செந்தூரத்தில் இரும்பு சுற்பொறை (Sulphor) என்னும் கந்தகத்துடன் இணைந்து கூடிகையாகிறது.

மாழைக் கரைசல்களில் இருந்து மாழை (Metal) களை வெளிக் கொணர இரும்பு பெரிதும் பயன்படுகிறது. இருப்பின் தொழில் துறைப் பயனுக்கோ அளவு கணக்கில்லை.

விண்கோள் தொடர்பு : சனி என்ற காரி (Saturn) க் கோளுடன் தொடர்பு படுத்தப்படவேண்டிய இரும்பைப் பண்டைக் கிரேக்க அறிஞர்கள் செவ்வாய்க் கோளுடன் (Mars) எப்படித் தொடர்பு படுத்தினுர்கள் என்பது புரியவில்லை.

குறியீடு : இரும்புக்கான டால்ட்டனின் குறியீடு (I) இரும்புக்கான இலத்தீன் சொல் Fe rrum என்பதால் பெர்சீலியசு குறித்தது Fe.

"கருங்கொல்(ஏ) அயம்(ஏ) (சொன்ன)
கரும்பொன்(னும்) இரும்பின் நாமம்"
*(மண்டல புருடர் 6 : 10)*

---


# " தமிழ்ச்சிட்டு "
## சென்னை - 5.

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு. |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 9-00 | 9-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-75 | 0-75 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க !

# சீனத்தில் ஒரு தமிழ் நாடுகாணி!

—அ. அரசேந்திரன்,
தொல்லெழுத்தாய்வாளர், தமிழ் ஆய்வுத்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்–திருவனந்தபுரம்.

ஓதல், பகை, தூது, பொருள்வயிற் பிரிதல்பற்றித் தொல்காப்பியம் இலக்கணம் படைக்கிறது. இந்நிலைப் பிரிவுகளில் இந்தியா மேலை நாடுகளோடு மிகுந்த தொடர்பு கொண்டிருந்ததற்குப் பல இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. போகர் என்ற முனிவர் ஓதல் பொருட்டுச் சீனம் சென்று அங்குத் தாம் கண்ட புதுமைகள், அந்நாட்டு மக்களின் பண்பாட்டு வரலாறுகள் ஆகியவற்றை மிகத் தெளிவாக நூலாக எழுதிவைத்தார். அவை 17–ஆம் நூற்றுண்டுச் சீனத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளப் பயனுடையதாய் அமையும் என்பதால் இங்கே அவர்தம் கருத்துகளைக் கூறுவோம்.

**நூல்கள் :** போகர் எழுதியதாகப் போகர் கற்பவிதி : 300 போகர் நிகண்டு, போகர் 7000, போகர் சரக்கு வைப்பு; 800, கருக்கடை: 500 போன்ற நூல்கள் உள்ளன. இவற்றுள் போகர் 7000 என்ற நூலே சிறந்த மருத்துவ நூலாக அமைவதோடு, சிறந்த ஒரு வரலாற்று நூலாகவும் அமைகிறது. இந்நூல் தம் மாணவர் புலிப்பாணிக்குக் கூறுவதுபோல் அமைந்துள்ளது. 7000 மண்டிலப் (விருத்தப்)பாக்களால் ஆனது இந்நூல்.

**காலம் :** (1) இவர் நூலில் மதாச்சாரம் (காண் 6; பாடல் 238) சொச்சம் (6:570) ரோமம் (போ. நிகண்டு) வெள்ளச்சி போன்ற 17–ஆம் நூற்றுண்டுச் சொல் வழக்குகள் காணப்படுகின்றன.

(2) இவர் குறிக்கும் லேகியம் என்ற சொல் அறப்பள்ளீச்சுர சதக்கத்தில் (கி.பி. 1701) பயிலப்படுகிறது.

(3) இவரின் துட்டு (3:128); சலர்ம் முதலிய வழக்குகள் முகலாயர் ஆட்சிக்காலத்தில்தாம் தமிழில் புகுந்தன.

(4) 16-ஆம் நூற்றுண்டில் தமிழில் புகுந்த பற்பம், மரியாதை போன்ற சொற்களை இவர் கையாள்கிறார்.

(5) "பள்ளு தமிழ் நாடகத்தைப் பற்றுன் பாருலகில் இருப்பவன் சித்தனுமே" (3:712) என்பது ஒரு பாடல் வரி. நமக்கு முதன் முதலில்கிடைத்த முக்கூடற்பள்ளுவின் காலம்: கி.பி.1676-1682.

(6) பிரபுலிங்க லீலை என்ற நூலைப்பற்றியும் ஒரு பாடல் குறிக்கிறது (6:735).

(7) திருமலை நாயக்கரின் (கி. பி. 1600-1650) செப்புப் பட்டயம் ஒன்று போகரின் மாணவரான புலிப்பாணியிடம் இருந்து இராமப்பையன் பழனி கோயிலின் பூசை செய்யும் உரிமையைப் பறித்ததைக் கூறுகிறது. மேற்கூறிய கருத்துகளை வைத்து நோக்கினுல் போகர் ஏறத்தாழ (1550-1625) இடைக்காலத்தில் வாழ்ந்திருக்கவேண்டும் என அறியலாம்.

**போகர் கண்ட சீனம்:** இவர் தம் இளமைப் பருவத்திலேயே சீனம் சென்று 'காலங்கி நாதர்' என்பவரிடம் அறிவுரைகள் பெற்றதாகப் பல பாடல்கள் குறிக்கின்றன. இக் காலங்கி நாதரின் இசைவு பெற்றே சீனத்தின் பல பகுதிகளையும் இவர் சுற்றிப் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

"மேருவுக்கு வடபால் வாழும் மக்கள் தங்க நிறத்தில் காட்சி தருகின்றனர்; இவர்கள் அம்மை(சக்தி)யை வழிபடுகிருர்கள் (3:60). மேருவுக்குக் கிழக்கே வாழ்வோர் சற்றுக் கருப்பு நிறம் வாய்ந்தவர்கள்; இவர்கள் திருமால் பக்தர்கள்; மேற்குத் திசையில் வாழ்வோர் சிவனை வழிபடுகிருர்கள் (3:61); இமையத்தின் தென் பால் வாழும் மக்கள் ஆமை நிறத்தினர்; குறைப் பருவத்தில் இறந்துபடுகிருர்கள். வணக்கமற்றவர்கள்; பொய் சூது நிறைந்தவர்கள் (3:63);

சீனத்தைப் போன்ற உயர்வான நாட்டை உலகில் வேறு எங்கும் காணமுடியாது (5:10); நாடெங்கும் பல சாவடிகள் (சத்திரங்கள்) காணப்படுகின்றன; பல முழை (குகை)களும்; சுரங்கங்களும் இருப்பதையும் காணலாம் (2:245); எழு முனிகள் (சப்தரிசிகள்) என்று அழைக்கப்படும், நாமனர், அத்திரியார் (5:14), புலத்தியர் (5:15), புல்கனர் (5:16), மகரிசி (5:16), வரிசிடர் (5:16) முதலியோர் சீனத்தில் பல மலை முழை(குகை)களில் வாழ்கிருர்கள். (5:17). இவர்களில் சிலரிடம் அறிவுரை பெற்றதாக ஒரு பாடலில் குறிக்கிருர் (5:19); இந்நாட்டின் வடபகுதியில் *பூ நீறு விளையும் பகுதியை முதன்முதல் கண்டுபிடித்ததாகக்குறிப்பர் (6:373)

* பூ நீறு: "Light white coloured earthly matter containing a great proportion of Carbonate of Soda. This is used as a medicinal Powder."

மக்கள் பண்பு : நிறம் மாறுபட்டுக் காணப்படும் இவர்கள் உரம் மிக்கவர்கள் (5;29), கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள்; இங்கு வாழும் மக்கள் பிறரை ஏமாற்றுவதில்லை. மன்னர் முதல் குருக்கள் ஈருக அருளும் அன்பும் கொண்டு ஒழுகுகின்றனர். உண்மையை மேலாக மதிக்கிருர்கள் (3:598). மெக்கா, உரோம் (3:215-220) எருசலேம் (3:223-224) போன்ற பல நாடுகள்சென்று அந்நாட்டுக் கல்வி முறைகளை அறிந்தேன்; எனினும் சீன நாட்டில் தருக்கம், வேட்டம் (யாகம்) தெளிவு பெற்றதைப் போன்று பிற நாடுகளில் இல்லை. பிற நாடுகளில் மெய்போலக் கூறும் உயர்வே விஞ்சி உள்ளன (6:257) என்றும் குறிக்கிருர். இந்நாட்டவர் உய்வு பெற காலங்கி நாதர் வான நூல், நில நூல் எழுதிக்கொடுத்துள்ளார் (3;152). இவர் அறிவுரைகள் இந்நாட்டவரால் மிகுதியும் மதிக்கப் பெறுகின்றன (3:250)'' என்பர்.

''பல நாடுகளில் பிணம் தின்னும் போலிச் சைவர்களைப் பார்க்கிறேன் (6:238); உண்மையான சைவம் எந்நாட்டிலும் இல்லை (6:237); ஆனுல் சீனத்தில் பலர் புலால் உணவைக் கவடமின்றி உண்கின்றனர். அஃது அந்நாட்டவர் மரபு (6:251); நாடெங்கும் மிகுதியான கோயில்கள் காணப்படுகின்றன (3:431). திருமாலுக்குப் பல பூங்காக்கள் காணப்படுகின்றன (6:252). இந்நாட்டவர் கடுமையான பூசை, குளியல். ஓகங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் (6:251). உலகில் நயன்மை (நீதி) யாருக்கு என்ருல், அது சீனத்தவர்களுக்குத்தான். அறவுரைகளைப் பதின்மடங்கு நம்புகின்றனர் (6:250);'' என்றும் குறித்துச் செல்கிருர்.

'இங்கே பல வண்ண வண்ணத் தாள்கள் உருவாக்கப் பெறுகின்றன' என்றும் பல பாடல்களில் காட்டிச் செல்கிருர்.

பெண்கள் நிலை; ''சீனப் பெண்கள் மிக அழகாகக் காட்சி தருகிருர்கள் (2:652); பற்றின் எல்லையைக் கடந்தவர்கள். எப்போதும் தொழும் பண்புடையவர்கள் (2:524);'' என்கிருர். இவர் முதன்முதல் சீனம் சென்றபோது, பல பெண்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றதாகக் குறிக்கிருர். சில பெண்கள் இவருடைய அழகைக் கண்டு மயங்கினர் (2:848, 768); சில பெண்கள் இவரோடு தொடர்பு கொண்டிருந்தனர் (2;654). பலர் இவரிடம் விரும்பிப் பல கல்வி முறைகளைக் கற்றுக்கொண்டனர்(2:768). சில பெண்களுக்குத்

தொடர் 2:

# மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்.

—புலவர். இறைக்குருவனார்.

## முத்தமிழ்ப் புலவோர்

[1]தொல்லைப் பழங்குமரி[2] நல்லகடு[3] வாய்ந்துதமிழ்
தோன்றுநாள் அன்றுதொட்டுத்
தூயபெரு மறைகளைத் தோற்றியும் இலக்கணம்
துறைதொறும் வரையறுத்தும்
எல்லை யிலாதபல கலையிலக் கியநூல்
இயற்றியும் வழங்கச்செயும்
ஈடிலா முத்தமிழ்ப் புலவோர்தம் மரபினில்
இலங்குநன் மாண்புமிக்கீர் !
சொல்லைப் புகுத்திநந் தமிழைச் சிதைத்தொடு
தொடர்பாய் நமைக்கெடுத்தோர்
சூழ்ந்தபொல் லாங்கெலாம் வீழ்ந்துபட வாகைகொள்
[4]சுடரனைய பேரறிவினன்
இல்லை இவற்குநிகர் என்றுலகம் ஏத்துநன்
இருந்தமிழ் வாணர்க்கெலாம்
இலக்கியம் இலக்கணம் இவனெனத் திகழ்தரும்
எந்தையைக் காத்தருள்கவே !

1. தொல்லை-தொன்மை; 2. குமரி-குமரிக்கண்டம்;
3. அகடு-வயிறு; 4. சுடரனைய-ஞாயிறு போலும்.

குமரி வயிற்றில் தமிழ் தோன்றியமை ஒரு புதுமையாயின வாறு காண்க.

[32-ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் நாட்டுப் பவளத்தைப் பரிசாகத் தந்ததாகவும், சிலரிடம் தென் பாண்டியில் முத்து விளைவதைப்பற்றிக் குறிப்பிட்டபோது வியந்து அந்நாட்டிற்குச் செல்லும் வழிகளைக் கேட்டனர் என்றும் குறிப்பிடு கிறார் (5:114). பெரும்பாலும் சீனத்துப் பெண்களுக்குப் பூப்புக் கண்டால் தீட்டு இல்லை; எனவே அவர்கள் நிறைய மக்கட் செல்வத் தைப்பெற்று விளங்குகின்றனர் (6:282)" என்பர்.

இவ்வாறு பல பயனுள்ளக் குறிப்புகளை ஆங்காங்குப் பல பாடல்களில் குறித்துச்செல்கிறார். இவை வரலாற்றோடு எந்த அளவு பொருந்தி வருகின்றன என்று ஆயவேண்டும். ○

## உரையாசிரியர்

ஐயமுந் திரிபுமற ஆர்ந்தபாப் பொருளெலாம்
அகழ்ந்தெடுத் துள்ளங்கொள
அருமைசான் மகவினுக் கமுதங் குழைத்தூட்டும்
அன்னையைப் போல்வழங்கி
வையகம் போற்றவுயர் செய்யதமி ழுக்குரை
வகுத்தநக் கீரன்மரபில்
வாழையடி வாழையென வண்டமிழ்த் தொண்டுசெய்
வளமார்ந்த புலமாண்பினீர் !
மெய்யருள் நூற்குரை செய்தலா காதென
மெத்தவும் கழிமடமையால்
மேலோர்தம் நூல்களை வாளா உருப்போட்டு
மெலியுநிலை முற்றுமாற்றி
ஐயன்மணி வாசகன் செய்ததிரு வாசகத்(து)
அரும்பொருள் விரித்து[1] மற்றும்
[2]ஆராய்ச்சி யுரைகள்செய் தாற்றுப் படுத்தநல்
அடிகளைக் காத்தருள்கவே !

## கணக்காயர்

அகரமுத லாங்கணக்[1] கிருவகை[2] வடிவையும்
அழகுறப் பயிலுவித்தே
அகக்கண் திறப்பித் தருங்கருவி நூல்களும்
அன்றிமற் றனயாவையும்
தகவுடன் மாணுக்கர் உள்ளகம் நிறைத்துநற்
றரமுயர்த் தாளாக்கிய
தலைநாட் [3]கணக்காயர் [4]சரவடித் தொடர்கின்ற
தனிப்பெருந் தலைமைசான்றீர் !
பகரரிய மலைவளம் மிகவுடை [5]அனந்தையில்
பரவுறு பெருஞ்சென்னையில்
பாங்குறக் [6]கல்லூரி யகத்தினும் மனையினும்
பல்லா யிரம்மாணவர்

---

1. திருவாசக விரிவுரை; 2. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சியுரை.

1. கணக்கு - எழுத்து வரிசை ; 2. இருவகை வடிவம் - ஒளி வடிவம், வரி வடிவம்; 3. கணக்காயர்-நூல் பயிற்றுநர்; 4. சரவடி-மரபு ; 5. அனந்தை-திருவனந்தபுரம்; 6. கல்லூரி-சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

அகமகிழ வினியதமிழ் விரிவுரை யாற்றி நல்
அறிவொளி வழங்குசெம்மல்[7]
ஆன்ருேர்கள் போற்றவரு சான்ருண்மை யாளனெம்
[8]அத்தனைக் காத்தருள்கவே!

## ஆராய்ச்சியாளர்

[1]காய்தல் உவத்தலில் லாதுமெய் காணுவான்[2]
கருத்துடன் நுணுகியாய்ந்து
கண்டநல் லுண்மையை விண்டருள்வ தன்றியுங்
கணக்கிலாப் புதுமைபலவும்
ஒய்தல் இலாதபே ருழைப்பினின் விளைவித்தும்
உருவாக்கம் செய்தளித்தும்
உலகெலாம் பெருநலம் பெறுவிக்கும் உயர்வுடை
ஒண்மையறி வியலறிஞர்!
சாய்தல் இல்ாதமன வுரமுடைய செம்மையன்
சலியா துழைத்தறிவிறு்
சரியெனக் கண்டவை தமையெலாந் தெரிவுறச்
சாற்றிமா மலையகத்து
[3]வேய்தல் செயப்பெற்ற மாடமென நிறுவுநன்
விளங்கிவளர் புதுமைவேட்பன்
வியன்பழந் தமிழ்நலம் [4]விருந்தினிற் காட்டுமிவ்
[5]விரகனைக் காத்தருள்கவே!

## பலகலைவாணர்

உள்ளங் கவர்ந்துபே ரறிவுநிலை யதனினும்
உணர்வுநிலை மேற்சிறப்ப
ஊக்கியுஞ் சுவைவயம் ஆக்கியும் இன்பநிலை
ஊட்டுநற் பெற்றிசான்ற
விள்ளருஞ் சீர்த்திசால் தெள்ளூற்ற கலைநலம்
வீறுமிகு பேறுபெற்று
வியன்ஞாலம் மேன்மேற் பயன்கொள்ள வாழ்வுறும்
விளங்குபல கலைவாணரீர்!

---

7. செம்மல்-தலைவன்; 8. அத்தன்-அப்பன்.

1. காய்தல்-வெறுத்தல்; 2. காணுபான்-காணும் பொருட்டு; 3. வேய்தல் – கட்டுதல்; 4. விருந்து-புதுமை; 5. விரகன்-திறமுடையோன்.

(வேறு)

இனி,
பாவேந்தர் உள்ளத்துள்ளே எரிமலை புகைந்ததென்றால்
ஈவாக என்ன நிற்கும்? என்பதை அறிய வேண்டும்!
சாவேந்திச் சென்ற தந்த தனிமகன் தணையென்றாலும்
தூவுந்தீக் கனப்பால் இன்றும் துவைகின்றார் பகைவர் அன்றோ?

(வேறு)

எரிமலைக் குமுறலை இதோ;இவண் காணுக! :
"எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே!
அடுத்தொரு குமுறலை அதோ கேளுங்கள் !
"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"
"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!"
அடுத்து,அவர் புரட்சிப் பாவலர் ஆகிக்
கடுத்த நெஞ்சொடும் கனலொடும் பேசுவார் !
"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு.
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!"
"இருக்கும் நிலைமாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்."
அடுத்துப்,
பெண்மை போற்றிய பெருமைப் பாவலர்
ஒண்மை பாரதி தாசப் பாவலர்!
"பெண்களால் முன்னேறக் கூடும்—நம்
வண்தமிழ் நாடும்எந் நாடும்" —என்று
—எடுத்த எடுப்பிலே முழக்கம் இடுவார்!
அடுத்த குரலிலே ஆணையே பிறக்கும்!

"பெற்றநல் தந்தைதாய் மாரே—நும்
பெண்களைக் கற்கவைப் பீரே!

அடுத்தொரு பாடல் அடியைக் கேட்பீர்!
துடித்த அவர் உள்ளக் குமுறலைத் தோய்ப்பார்!

"ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம் பெண்கள்—நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!"

தமிழகம் தன்னைக் காத்திடச் சொல்லிக்
கமழ்நறும் பெண்மைக்குக் கடமையைத் தூண்டுவார்!

"தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய்—பெண்ணே
தமிழரின் மேன்மையைக் காப்பாய்!
தமிழகம் நம்மதென் றார்ப்பாய்!
தடையினைக் காலினால் தேய்ப்பாய்!"

"அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்" —என்று
மெச்சும் பெண்மையின் மேன்மையைப் பாடியோர்
உச்சுக் குடிமிகள் காலத்தில் உண்டா?

"கலியாணம் ஆகாத பெண்ணே!—உன்
கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே!
வல்லமை பேசியுன் வீட்டில்—பெண்
வாங்கவே வந்திடு வார்சில பேர்கள்!
நல்ல விலைபேசு வார்கள்—உன்னை
நாளும் நலிந்து சுமந்துபெற் றோர்கள்;
கல்லென உன்னை மதிப்பார்—கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையும் காட்டார்!
வல்லி உனக்கொரு நீதி—இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீஅஞ்ச வேண்டாம்!"

—என்று கூறி,

"கற்றவளே ஒன்று சொல்வேன்—உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்'

—என்று முடித்தவர், —அவர்

"
ஞாயந் தராவிடில் விடுதலை மேற்கொள்"

—என்று துணிவையும் ஏந்திழைக் குரைப்பார்!
பெரிய உலகில் பெண்ணலம் பேசிய
அரிய பாவலன் பாரதி தாசன்!

அடுத்துப்,
பாவேந்தர் ஒரு பகுத்தறி வுணர்வினர்.
ஆவலால் இதனையும் அவர்வா யாலே
கேட்டு மகிழ்வோம்!

"குடிக்கவும் நீரற் றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே—தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு!"

"கடவுள் கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்!
உடைசுமந்த கழுதைகொண்
டுழைத்ததோர் நிலைமையும்
உடைமை முற்றும் படையைஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவுளாணை யாயின், அந்த
உடை வெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

அடுத்துப்,
பாரதி தாசன் பைந்தமிழ் இனத்தையெந்
நேரமும் காலமும் நிமையமும் காத்தான்!
அவனின் காவல் எப்படிப் பட்டது?
அவன்குர லாலே அவனுளங் கேட்போம்!
அவனின் சூளுரை ஆர்ப்பரிப் பிஃதாம்!

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்"

"செந்தமிழே உயிரே நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!"

"கவிதை எனக்கொரு கைவாள்!—மார்புக்
கவசம் எனக்கு வாய்மை!
புவியினில் தீமைகள் வீழ—நான்
போர்செய்யும் ஓர்படை வீரன்!"

—இப்படிப் பலவா றெடுத்தெடுத் துரைக்கலாம்'
அப்படி உரைக்கினும் அடிமைத் தமிழனுக்
குணர்வு கொளுத்துதல் உலகினில் கடினம்!
உணர்வுத் தீயினை ஊர்ஊ ராகப்
பாரதி தாசனின் பாடலால் பரப்புக!
வேர் அது தமிழர்க்கு! தமிழ்க்கது விளைவே!

(வணக்கம்.)

0:521 : 'கதவு திறந்ததும், அரிமா வந்ததும் புதுப்புது விளைவு-கள் நடப்பன எல்லாம் கேட்கிறேன். மகிழ்ச்சி கொள்கிறேன். அறத்தின் கூறுகள், அறிவின் கூறுகளாக ஒளிர்கின்றன. நாயின் சாவம்' என் நெஞ்சினைக் கசியச்செய்தது. ஐயாவை நல்ல நாடகம் எழுதச் செய்த சிறைக்கு என் வாழ்த்து. —அரிமா, பட்டணம், சேலம்.

0:522 : தமிழ் நலஞ்சான்ற பாவலரய்யா அவர்கட்கு வணக்கம். தென்மொழியின் அட்டைப் பாடலும்; புலவர் இறைக்குருவனாரின் மறைமலையடிகள் பிள்ளைத் தமிழும் மிகவும் அருமையுடைத்து. ஐயா, நாம் இனவுணர்வு பெறவேண்டுவது உண்மையே ஆயினும் இக்கால் பஞ்சமும், வறுமையும், கொய்யாக்கனியில் வருவது போன்று தலை விரித்தாடுகிறது. ஏழை மக்கள்பால் அருளுள்ளங் காட்டுபவர் யார்? அவர்களின் முனகல் அழுகுரலை அறிவார் யார்? எம் சிற்றூர் சென்ற ஞான்று எம்மில்லம் உட்பட, பலரும் இதே நிலையே! என்செய்ய!

— குழந்தை ஈகவரசன், திருச்சி-14.

0:523 : அன்புள்ள அருந்தமிழ் புரக்கும் ஆற்றல் மறவ! 'தென்மொழி'க் கொள்கைக்கு வித்திட்ட வேந்தே! அய்யா, தங்கள் நலமும், தமிழ் நலமும் அறிய விழைவுளேம். தென்மொழி இதழ் கண்டேன்; கற்றேன். ஆசிரிய உரையில், அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற செந்தமிழ்ப் பாவியமாம் சிலப்பதிகார வசியினை நுண்ணிதின் ஆய்ந்து குறளொடு தெளிந்த மெய்ப்பொருளை உண்மைத் தமிழன்பர் யாரும் எளிதில் புரிந்து கொள்ளுமாப்போல் அமைப்புடன் எழுதியிருந்தீர்கள்; அஃது அப்படியே 'தேர்தல் முடிவின்' வழியில் மெய்ப்பிக்கப்பட்டது அறிந்து மகிழ்வெய்தினம். இருள் சூழ்ந்த வானில் ஒளிச்சுடர் கிளம்பிற்று; அடிமைச் சட்டங்கள் ஓடி ஒளிந்தன; அய்யா, இனிமேல் விடிந்தது என்றே விளத்தம் காண விழைந்து நிற்கிறோம். தனித்தமிழ்த் தொண்டைப் பரப்புவதில் முன்னிதழிற் குறிப்பிட்டதுபோல ஆசிரியர் வழியானும், தென்மொழி பெரிதுபடுத்தும் வழியானும் நம் கருத்தை வலியூட்டலாமென பாங்கரோடு, யானும் கருதுகின்றனம். சிறைப்பிறந்த இரண்டாவது குழவியாம் 'ஐயை' இரண்டாம் பகுதி அஞ்சல் செலவோடு ஆகும் விலையைக் குறித்தும், மற்ற செய்திகளை வரைந்தும் மடல் விடுக்க.

—தி. க. மும்முடி முகிலன், முகவை.

0:524 : அன்பும் அறிவும் பெற்ற பெரியீர்! என் அகமலர் வணக்கங்கள். தாழ்ந்து கிடக்கும் தமிழகத்துள் தனிப்பெருந் தலைவனாய், தனித்தமிழ் தலைநிமிர்ந்து நடையிடத் துடிக்கும் இளைஞர்களுக்கு நல்ல ஆசானாய், மொழிப் போராட்டத்திற்குத் தகைசான்ற அறிஞனாய், தாங்கள் ஒருவரே தமிழகத்திற்குக் கிடைத்தமை கண்டு, தங்கள் பெருந்தொண்டை எண்ணி மனம் மகிழ்கின்றது. வெறும் ஆரவாரத்திற்கும், விளம்பரத்திற்கும் கிடைக்கின்ற வெற்றுப் போலி ஆசைகளில் புகழினில் மூழ்கிவிட்ட தமிழகம் இன்று பாசி படர்ந்த பழங்கிணறாய்க் கிடக்கின்றது. இக் கிணற்றில் உள்ள தவளைகள், தரங்கெட்டு நடத்தும் 'அரசியலும்', தலைகால் புரியாத நடிகர்கள் நடத்தும் 'கலைகளும், மிகுந்து மேலும் மேலும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்கின்றன. தமிழகத்திற்குப் புதைகுழிதான் தோண்டுகின்றன. பொய்ம்மை உலகினிலே உலவுகின்றன. நான்கு எழுத்துகள் கற்றுவிட்டால், தான் மிகப்பெரிய அறிஞன் என்றும், தான்தான் தலைவன் என்றும் உளறுகின்றபொய்யர்களிடம் தாங்கள் மெய்யறிவு-பகுத்தறிவு-ஒளி ஊட்ட வந்த நல் விளக்கு!

தமிழகத்துள் களப்பிரர் ஆட்சிக்குப்பிறகு தாழ்வு நிலை இன்றும் சிறிதேனும் உயரவில்லை. கூனிக்குறுகி, ஒடுங்கிவிட்ட தமிழன் — தங்கள் ஒருவராலேதான் நிமிர்த்தப்படவேண்டும். மெய்ம்மையான இறைவுணர்வற்ற தமிழன், மெய்ம்மையான அறிவை இழந்துவிட்ட

தமிழன், மெய்ம்மையான பகுத்தறிவு இழந்துவிட்ட தமிழன், எல்லாவற்றையும் இழந்துவிட்ட ஏதிலியாய், ஏமாறி ஏழையாய், சோம்பிவிட்டான். இந்நிலையை எண்ணும்போது என்னையறியாமல் என்னுள்ளம் தங்களைத்தான் எண்ணுகின்றது. இப்படிப் பலப்பல வகைகளில் பிரிந்துவிட்ட தமிழர்கள் தனித்தமிழராய் ஒன்றிவிட்டபோது, எங்கும் தமிழர்கள் ஒன்ருய் இணைந்தனர் என்ற சொல்லும் உண்மையாகின்றது. —சி வெற்றிவேந்தன், கரைமேடு, பாகூர் (தெ.ஆ.)

0:525 : வளங்கெழு தமிழின் உயர்வு ஒன்றையே உளந்தனில் ஏந்தி நறுந்தொண்டாற்றும் நற்றமிழ்ப் பாவல! தென்மொழிக்காவல! வரலாற்றின் பொலிவேடுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நம் தமிழகம் கறைபடியச் செய்துள்ள இவ்வேளையில் இந்தியத் தலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதலை நினைத்தும், தாளிகைத்தணிக்கை முறைக்கு விடை கிடைத்ததனை எண்ணியும் எம்போன்ற தமிழன்பர்கள் சற்றேனும் களிப்பெய்துவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தடமார்பும் குன்றத்தோளும் முடமாகிப்போக, வடவருக்கு வால்பிடிக்கும் தளர்நடைத் தாளிகையரிடையே தனிப்பெரும் ஒளி நிலவாக, தமிழ்ர்க்கு வழித்துணையாம், தடை பல கடந்த தனித்தமிழ் மணங் கமழும் தென்மொழி மீளவும் முன்னைப் பொலிவோடும், புதிய வலிவோடும், கட்டவிழ்த்த அரிமாச் சிந்தனையில் அரிய கருத்துச் செறிவோடும் ஏறுநடையிட்டு வரும் என்று யாம் எதிர்நோக்குகின்ருேம்.

—செ. அருள்-இறைவோன், சோ. ஆற்றலரசு, முகவை

0:526 : தென்மொழி ஐயா, வணக்கம். தென்மொழி, தமிழ்ச்சிட்டு கிடைக்கப்பெற்றேன். இவற்றைக் கண்டபோது நானடைந்த மகிழ்விற்கும் உளப் பூரிப்பிற்கும் உவமையே இல்லை. தமிழ்ச்சிட்டு என் கையில் பெற்றவுடனே என் மாணவச் செல்வங்கள் முண்டியடித்து வாங்கிய காட்சி கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். எனக்கே இதழ் கிடைப்பது அரிதாயிற்று, அந்த அளவிற்கு மாணவர்களைத் தமிழ்ச்சிட்டு மாற்றியிருக்கிறது. நான் மாணவர்களை மாற்றினேன் என்று சொல்வது கூடப் பொருந்தாது, என் வாழ்நாளை, தென்மொழி, தமிழ்ச்சிட்டு வழித் தமிழ்த்தொண்டிற்கே செலவிட எண்ணியுள்ளேன். கோடை விடுப்பிற்குப் பின் குடியேற்றம் போன்ற நகர் சென்று தென்மொழி தமிழ்ச்சிட்டு விற்பனை செய்யத்திட்டமிட்டுள்ளேன். விடுப்பிற்குப் பின் தென்மொழிக்கு உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபடுவேன். சாத்தனூர் சுற்றுப் புறங்களிலும் பரவ வழிசெய்ய விரும்புகிறேன்.

ஐயா, தமிழ் முன்னேற- தமிழகம் சிறப்படைய- தென்மொழி, தமிழ்ச்சிட்டு பரவுதல் வேண்டும். இ:தொன்றே முதன்மை வழி. தமிழ் நாட்டில் தமிழ் ஆசிரியர்களே இன்னும் தனித்தமிழ் போற்றுதும்-தென்மொழி போன்ற இதழ்களைத் தெரிந்து கொள்ளாதிருப்பதும் தமிழகதிற்கே உரிய பெரு வியப்பாகும். இத்தகு வியப்பு, முன்னேரு இருட்கண்டத்திலும் காண்டல் அரிது. அவ்வளவிற்கேன், தமிழ் பயின்ற தமிழாசிரியர்- தமிழ்ப்பேராசிரியர் பலர்'பாவாணர் யார்?' என்றே கேட்கின்றனர். அத்தகு பேராசிரியர்கட்குச் சிறியவனுகிய யான் விளக்கவும் இதழ்களை அறிமுகப்படுத்தவுமே நேரம் போதவில்லை. —புலவர் மு. ஆறுமுகம், கொட்டமிட்டா வ.ஆ.

(தொடர்ச்சி-15-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம் சென்னை-600005 (தமிழகம்)